SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:10, Pages:56
May-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2023,

விலை ரூ.20/-



திருப்பதி

## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

2023, மே 26 முதல் ஜீன் 03 வரை

திருமலையில் வசந்த மண்டபத்தில் 03-04-2023 முதல் 05-04-2023 வரை நடைபெற்ற வசந்தோத்ஸவ ஸ்நபன திருமஞ்சன திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



















திருமலை திருப்பதி தேவஸ்தானம்

*ஏவமுக்த்வார்ஜுந: ஸங்க்$_2$யே*
*ரதோ$_2$பஸ்த$_2$ உபாவிசத்।*
*விஸ்ருஜ்ய ஸசரம் சாபம்*
*சோகஸம்விக்$_3$நமாநஸ:॥*

**ஸஞ்சயன் கூறுகிறார்–**
**“போர்க்களத்தில் சோகத்தினால்**
**கலங்கிய மனத்துடைய அர்ஜுனன்**
**இவ்விதம் சொல்லி அம்புகளுடன்**
**வில்லை எறிந்து விட்டுத் தேர்த்தட்டில்**
**உட்கார்ந்து விட்டார்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–47*





*எட்டிஹரிதோபதேசகுடெடுவன்டிதயாளுவு*
*அட்டி தாள்ளபாகன்னமாசார்யுலு*

*பச்சி தாமஸுல மம்மு பரம ஸாத்விகுலகா*
*யிச்சடனே ஸேஸிநாடு யெந்த சித்ரமு*
*யிச்சகின்ச மாகுலான நென்னடுலேனி வைஷ்ணவ*
*மச்சமுகா க்ருப ஸேஸே நன்னமாசார்யுடு*

*முதிரின பாபகர்மமுலு ஸேஸிநட்டி மம்மு*
*யெதுட புண்யுலு ஜேஸெனென்தஸோத்யமு*
*கதிஸி யே ஜன்மான கானனி ஸங்கீர்தன*
*மதன நுபதே சின்செ நன்னமாசார்யுடு*

*கடுஸுதனபு மம்மு கடுவிவேகுல ஜேஸி*
*யிடுமலெல்லா பாபெனே மருது*
*நடுமனெ யென்னடு கானனி ஸ்ரீவேங்கடநாது*
*நடியாலமுக நிச்செ நன்னமாசார்யுடு*

**அன்னமாசாரியார் நற்குணங்களைக் கொண்டு, எல்லையில்லா கருணை பொழிந்து, மந்தமாக இருந்த எங்களின் மன இருளை அகற்றி, பாவங்களைப் புரிந்த எங்களை புனிதபடுத்தி, ஹரிநாம சங்கீர்த்தனத்தை எடுத்துரைத்தவர். எங்களின் இடர்களைக் களைந்து திருவேங்கட நாதனிடம் எம்மை அர்ப்பணித்து வைத்தவர்.**

*- சின்ன திருமலாசாரியார்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!**
**தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"**
**சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!**

**உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்**
**மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்**

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்





# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

### .....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
இவ்விலை மாற்றம் புதிதாகக்கட்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்




# ஸப்தகிரி

## சமய மாத இதழ்




மே
2023

மலர் 02 இதழ் 10



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


பக்கம்

சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை: நரசிம்ம அவதாரம் 7
- முனைவர் பிரியா கிருஷ்ணன், சென்னை.

அனுமனுக்கு செந்தூரம் பூசுவது ஏன்? 10
-திரு.பொ.பாலாஜி கணேஷ், சிதம்பரம்.

தமிழ்நாடு பஞ்ச நரசிம்மர் கோயில்கள் 11
- திரு.நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம்.

ஜோதிட சாஸ்திரம் : செவ்வாய் 14
- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை.

அன்னமய்யா பக்தி - திருமதி ராதா ராமநாதன், திருப்பதி. 18

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை:
விசுவாமித்திரர் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, சென்னை. 20

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 22

மதுரகவியாழ்வாரும்–அனந்தாழ்வானும்
- டாக்டர் கலியன் சம்பத்து, சென்னை. 24

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்
இளம் கோயிலும் உளம் கோயிலும்
-பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. 31

108 திவ்யதேச வைபவம் : திருக்கச்சி 35
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

ஆதிசங்கர பகவத் பாதாள் - திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத். 38

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும்
உரையும் : திருமாலையாண்டான்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 40

ஆயுர்வேதம் : அத்திமரம் - திருமதி வி. உஷா, திருப்பதி. 42

நீதிக்கதை : நற்குணமே உயர்வு தரும் 44
- திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி.

ராசிபலன்கள் : மே 2023 - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். 47

சித்திரக்கதை : ஸ்ரீகூர்ம அவதாரம் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயநாச்சிமார்களுடன் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருப்பதி.
பின்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.









# நாளை என்பது நரசிம்மனுக்கு இல்லை!

அனைத்து ஜீவராசிகளும் கர்மவினைப் பயனாக பூமியில் பிறக்கின்றன. ஆனால், பரம்பொருளானவர் எவ்வித கர்ம வினையுமின்றி அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலை நாட்டவே பூமியில் அவதாரங்களை எடுக்கின்றார். அவ்வகையில் பரம்பொருளான திருமால் எடுத்த அவதாரங்கள் பல பல. அவற்றில் அனைத்து புராணங்களும் போற்றுவது ஸ்ரீநரசிம்ம அவதாரத்தையே.

அந்த நரசிங்கப்பிரானுக்கு "அடித்த கைபிடித்த பெருமான்" என்ற பெயரும் உண்டு. எங்கடா? உன் நாராயணன் என்று கேட்டு இரண்யன் அடிக்க கை ஓங்கியவுடன், இதோ என்று அடுத்த நொடியே கையைப் பிடித்துக் கொண்டார். இதனைப் பெரியாழ்வார் "அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே, வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்கவுருவாய், உளந்தொட்டிரணியன் ஒண் மார்வகலம், பிளந்திட்ட கைகளால் சப்பாணி..." என்று பாசுரமிடுகிறார். நரசிம்மன், தன்னை அடிக்க ஓங்கிய இரண்ய கசிபுவின் கையையும், சிரசையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். இந்த பிடி நம்மை மரண வாயிலுக்கு கொண்டு போய் விடும் போலிருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டு, சரணாகதி பண்ணுகிறானா? என்று பார்க்கலாம். அப்படி பணிந்து மன்னிப்பு கேட்டால் விட்டு விடலாம் என்று பெருமான் அவனுக்கு ஒரு வாய்ப்பும் கொடுக்கிறாராம். அந்த பக்த வத்சலனுக்குத்தான் எவ்வளவு கருணை உள்ளம். உக்கிர நரசிம்மராக இருக்கும்போதே இவ்வளவு கருணை என்றால், சாந்த வடிவினனாக இருக்கும் போது எவ்வளவு கருணை அவனிடம் வெளிப்படும் என்பதை அறிதல் வேண்டும்.

பிரகலாதன் "எங்குமுளன் நாராயணன்" என்று கூறியபோது, அவன் வார்த்தையை உண்மையாக்க திருமால் பூண்ட அவசரத் திருக்கோலம்தான் நரசிம்ம அவதாரம். வைகுண்டத்தில் ஆதிசேஷன் மீது அமர்ந்திருக்கும் நிலையில் ஸ்ரீமந்நாராயணன் காட்சியளிப்பார். ஆனால், நம்மாழ்வாரோ அங்கும் நரசிம்மனையே காண்பதாக *"எங்கும் நாடி நாடி நரசிங்கா! என்று வாடி வாடும் இவ்வாநுதலே"* என்று பாசுரமிடுகிறார். திருமங்கையாழ்வாரோ நரசிம்மனைப் பாடாத பாட்டும் ஒரு பாட்டா? அவனைப் பேசாத நாவும் ஒரு நாவா? அவன் புகழ்க் கேளாத செவியும் ஒரு செவியா? என்கிறார்.

இராமாயணத்தில் அசோக வனத்தில் சீதையிடம் அனுமன், அன்னையே! தாங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? எம் தலைவர் இராமன் என் தோளிலே ஏறி வருவார். நரசிம்மனைப் போல என்கிறான். கிருஷ்ணாவதாரத்தில் ருக்மணி ஓலை எழுதுகையில் ஓரிடத்தில் கூட கிருஷ்ணா, வாசுதேவா என்று எழுதவில்லை. பொய்யில்லா பெருமானை "நரசிம்மா" என்றுதான் எழுதினாளாம். காரணம் அழைத்தவுடனே காக்கக் கூடியவர் நரசிம்ம பெருமான்தான் என்கிற திடமான நம்பிக்கை. ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசன் திருக்கல்யாணத்தின் போது உணவை யாருக்கு நிவேதனம் செய்வது எனக் கேட்க, ஸ்ரீநிவாசரும் "அகோபில நரசிம்மருக்கே நிவேதனம்" என்கிறார். விஷ்னு சகஸ்ரநாமத்தின் முதலில், நடுவில், முடிவில் நரசிம்மரைத்தான் கூறப்பட்டுள்ளது. நரசிம்ம பெருமானை பார்த்து *"நரசிங்காய நம:"* என்று கூறி புஷ்பத்தை இட்டு துதித்து தியானம் செய்தால் அனைத்து பிரம்ம வித்தைகளும் நமக்கு கிடைத்த பலன் உண்டாகும்.

இந்த நரசிம்ம அவதாரத்தில் பக்தனின் வாக்கை மெய்ப்பிக்க பகவான் அங்கிருந்த அனைத்து தூண்களிலும் வந்து எழுந்தருளி இருந்ததாக ஆசாரியர் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் இந்த அழகர்பிரானான நரசிம்மன் பக்தவாத்சல்யன் என்பதில் ஐயமில்லை. நாராயணன் தன் பக்தனுக்காக அளித்த வாக்கை காப்பாற்ற கணப்பொழுதில் தோன்றி அருளினார். அது போன்று நாமும் அவரை சரணடைந்தால் நம்மையும் காத்திடுவார்.

நரசிம்ம அவதாரம் விஷ்ணுவின் நான்காம் அவதாரம் ஆகும். இதில் இவர் சிங்கத்தின் தலையையும், மனித உடலையும் கொண்ட நர–சிம்ம அவதாரம் எடுத்தார். நாராயணர் வராக அவதாரம் எடுத்துத் தன் சகோதரன் இரண்யாட்சனை கொன்ற செய்தியைக் கேட்டதும் இரண்யகசிபுக்கு அடங்கா கோபம் வந்தது. பிரம்மனை நோக்கிக் கடும் தவம் புரிந்த இரண்யகசிபு, இந்த மூவுலகையும் ஆளும் வல்லமையும், இரவிலோ, பகலிலோ, தேவ னாலோ, மனிதனாலோ, விலங்காலோ, பறவை யாலோ, ஆயுதங்களாலோ, நீரிலோ, நிலத்திலோ, ஆகாயத்திலோ எனக்கு மரணம் உண்டாகக் கூடாது என்று வரம் பெற்றான்.

இரண்யகசிபு தவம் முடிந்து, ஊர் திரும்பும் சமயம் அவன் மனைவி கயாது அழகிய மகனை பெற்றெடுத்திருந்தாள்.இரண்யகசிபு பிரம்ம தேவர் அளித்த வரத்தின் பலத்தால் மூன்று உலகங்களையும் அவன் விருப்பம் போல ஆட்டிப்படைத்தான். தேவர்களும், முனிவர்க ளும் அல்லல்பட்டனர். மூவுலகமும் இரண்யகசிபு வுக்கு நடுங்கிக் கொண்டிருந்தன. அவனும் இரவும் பகலும் விரோதியாகக் கருதும் நாராயணனைக் கொல்லும் எண்ணத்துடனேயே இருந்தான்.

சுக்கிராச்சாரியாரின் புதல்வர்களான சண்டன், அமர்க்கன் இருவரும் பிரகலாதனுக்கு கல்வி போதிக்கத் தொடங்கினர். சில மாதங்களுக்கு பிறகு இரண்யகசிபு மகன் பிரகலாதனை அழைத்து வரச் சொன்னான். சுக்கிராச்சாரியாரின் பிள்ளைகள் பிரகலாதனை அழைத்து வந்தார்கள். மகனை கண்டதும் இரண்யகசிபு மகிழ்ச்சியுடன் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். பிறகு அவன், குருவிடம் கற்றவற்றில் சிலவற்றை கூறும்படி கேட்டான். பிரகலாதன் தந்தையை வணங்கி, நாராயணனுடைய கல்யாண குணங்களை கேட்பதும், சொல்லுவதும், அவரைத் துதிப்பதும் மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் என்றான். இரண்யகசிபுக்கு வந்ததே கோபம், ஆத்திரத்தில் மகன் என்றும் பாராது தூக்கிக் கீழே போட்டான். குழந்தை என்றும் பாராது கொடுமைகள் பல இழைத்தான். பிரகலாதன் தந்தையை வணங்கி கரம் குவித்து நாராயணனை மனதில் நினைத்து தந்தையே; படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்யும் பரந்தாமனின் திருநாமம்தான் அனைத்திலும் காப்பாற்றப்பட்டதற்குக் காரணமாகும் என்றான். என்னடா பிதற்றுகிறாய்? மூவுலகத்திலும் என்னைக் காட்டிலும் மேலானவன் இருக்கி றானா? அவன் யார்? எங்கு இருக்கிறான்? என்று ஆத்திரமாக கேட்டான் இரண்யகசிபு.



## சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை

# நரசிம்ம அவதாரம்

–முனைவர் பிரியா கிருஷ்ணன்,
சென்னை, 7299587879

தந்தையே அவர் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார். ஏன் நீவிலும் இருப்பார். உங்களுடைய சொல்லிலும் இருப்பார் என்று அமைதியாகக் கூறினான். இரண்யகசிபு மிக்க கோபத்துடன் என்னடா உளறுகிறாய். இந்தத் தூணிலும் இருப்பாரா? எங்கே காட்டு என்று கையில் கதையுடன் தூணை நோக்கி ஓடினான். தூணைக் கதையால் தாக்கினான். மறுகணம் தூண் இரண்டாகப் பிளந்தது.






## நவ நரசிம்ம தலம், அகோபிலம்

ஆந்திர பிரதேசத்தின் அகோபிலம் தலத்தில் பிரகலாதனுக்குக் காட்சி கொடுத்த நரசிம்மரை அதே தலத்தில் தரிசிக்க விரும்புவதாக கருடன் வேண்ட, அகோபிலத்தில் ஒன்பது நரசிம்ம வடிவங்களில் கருடனுக்குக் காட்சி கொடுத்தார். நவநரசிம்ம தலமான இங்கு நரசிம்ம மூர்த்தங்களைப் பூஜித்து வழிபட்டார். அகோபிலம் அமைந்துள்ள மலைப்பகுதி ஆதிசேஷன் தோற்றத்தில் அமைந்துள்ள மலைத் தொடரின் ஒருபுறம் திருமலை அமைந்திருக்க, மறுபுறம் ஸ்ரீசைலம் அமைந்து உள்ளது. கருடன் வழிபட்ட ஒன்பது நரசிம்ம மூர்த்தங்களும் சுயம்பு வடிவங்கள் ஆகும். அவையாவன, **அகோபில நரசிம்மர் :** உக்ரமூர்த்தியான இவர் மலைமீது எழுந்தருளியுள்ளார். புராதான பெருமாள் இவரே. **பார்க்கவ நரசிம்மர்:** பார்க்கவன் என்பது இராமபிரானின் திருப்பெயர்களில் ஒன்று. **யோகானந்த நரசிம்மர்:** மலை மீது தென்கிழக்கு திசையில் 4 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளார், பிரகலாதனுக்கு யோகம் கற்பித்த மூர்த்தி இவர்.

**குரோத (வராக) நரசிம்மர்:** பாபநாசினி நதிக்கரையின் கிழக்கில் லக்ஷ்மி நரசிம்மரும், வராக நரசிம்மரும் குடிகொண்டுள்ளனர். இரட்டைநரசிம்மர் தலம் என்னும் பெயருடைய இவ்விடத்திலிருந்து பார்த்தால் வேதகிரி, கருடாத்ரி மலைகளுக்கிடையேயான பள்ளத்தாக்கையும், வராக குண்டத்திலிருந்து பாப நாசினி நதி ஓடி வருவதையும் காணலாம். **கராஞ்ச(சாரங்க) நரசிம்மர்:** மேல் அகோபிலத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளார். கராஞ்ச மரத்தடியில் கோயில் கொண்டு கையில் வில்லேந்தியுள்ளதால் இப்பெயர் பெற்றார். **மாலோல நரசிம்மர் :** (மா – லக்ஷ்மி, லோலன்–பிரியமுடையவன்). தனது உக்கிரத்தைக் குறைத்ததால் லக்ஷ்மியின் பிரியனாகிய பெருமாள் பிராட்டியை மடியில் அமர்த்தியபடி லக்ஷ்மி நரசிம்மராகக் காட்சி தருகிறார். அகோபிலத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் குடி கொண்டுள்ளார். **பாவன நரசிம்மர்:** பாவனி நதிக்கரையில் கோயில் கொண்டுள்ளதால் இப்பெயர் பெற்றார். அகோபிலத்தில் இருந்து 6 கி.மீ. தொலைவிலிருக்கும் இத்தலத்தில் வருடாந்திர உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். **ஜுவாலா நரசிம்மர்:** இரண்யனை வதைத்த இவர் மேரு மலையில் வீற்றுள்ளார். இரண்யனை வதைத்தவர் இவரே, வதைத்த இடமும் இதுவே என்கின்றனர். இந்த நரசிம்மரை தரிசிக்க மிக குறுகிய வழியில் செல்ல வேண்டும். இவர்களைத் தவிர எட்டு மற்றும் நான்கு திருக்கரங்கள் கொண்ட இரண்டு நரசிம்மர் திருவடிவங்களை தரிசிக்கலாம்.







பயங்கர தோற்றத்துடன் நரசிம்மர் தோன்றினார். அந்தி சந்திக்கும் வேளையில் இரண்ய கசிபுவைப் பற்றி இழுத்துத் தூக்கிக் கொண்டு வாயில் நிலைப் படிக்கு வந்தார். இரண்யகசிபு விடுவித்துக் கொள்ள பெருமுயற்சி செய்தான். நரசிம்மர் பிடியை விடாமல் தமது நகங்களால் அவன் உடலைக் கிழித்தார். இரண்யகசிபு மடிந்ததை கண்டு தேவர்கள் மலர் மாரிப் பொழிந்தார்கள். பிரகலாதன் கரங்குவித்து நரசிம்மரை துதித்தான், இதனை,

செயிர் தீர் செங் கட் செல்வ! நிற் புகழ
புகைந்த நெஞ்சின், புலர்ந்த சாந்தின்
பிருங்கலாதன் பலபல பிணி பட
வலந்துழி, மலர்ந்த நோய் கூர் கூம்பிய
நடுக்கத்து
அலர்ந்த புகழோன், தாதை ஆகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக நீ
இகழா
நன்றா நட்ட அவன் நன் மார்பு முயங்கி,
ஒன்றா நட்டவன் உறு வரை மார்பின்
படிமதம் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னரொடு இடி முரசு இயம்ப
வெடி படா ஒடி தூண் தடியொடு
தடி தடி பல படவகிர் வாய்த்த உகிரினை

–பரி.4.10–21

என்று பரிபாடல் இந்த அவதாரத்தைப் பதிவு செய்திருக்கிறது. நரசிம்ம சுவாமி இந்தியாவெங்கிலும் வழிபடப்பட்டாலும், தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களில் தான் இவருக்குப் புகழ் வாய்ந்த தனிக்கோயில்களும் சிறப்பு வழிபாடும் அதிகம். நவ நரசிம்ம தலமான அகோபிலம், பஞ்ச நரசிம்மர் தலங்கள் கேதவரம், மங்களகிரி பானக நரசிம்மர், மட்டப்பல்லி, வாடப்பல்லி, வேதாத்திரி. அஷ்ட நரசிம்ம தலங்களான அந்திலி, சிங்கரி கோவில், சிங்கப்பெருமாள் கோவில், சிந்தலவாடி, சோளிங்கர், நாமக்கல், பரிக்கல், பூவரசன்குப்பம் என்ற இடங்களிலும், ஆந்திரப்பிரதேசத்தில் அகிரபள்ளி வியாக்ர நரசிம்மர், எர்ரகுண்டா நரசிம்மர் கோவில் என்ற இடங்களிலும், கர்நாடகத்தில் அகர பஞ்சமுக நரசிம்மர், கர்பரா நரசிம்மர் (அரசமரம்), கனககிரி லக்ஷ்மி நரசிம்மர் (லிங்கம்), நரசிப்பூர் குஞ்சால நரசிம்மர், பாண்டவபுரம் யோக நரசிம்மர், ஹம்பி லட்சுமி நரசிம்மர் கோயிலும் உள்ளன.

தமிழ்நாட்டில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் திருக்கோயில், இங்கு லக்ஷ்மி தேவி நரசிம்மரின் இடத்தொடையில் அமர்ந்து நரசிம்மரை இரு கைகள் கூப்பி வழிபடுவது வேறெங்கும் இல்லாத சிறப்பு. திண்டிவனம் கீழப்பாவூர் நரசிம்ம பெருமாள் கோவில், தங்கவள்ளி லக்ஷ்மி நரசிம்மர், நரசிங்கம் யோகநரசிங்கப் பெருமாள் கோயில் யானைமலை மதுரை காட்டழகிய சிங்கப்பெருமாள் கோயில் திருவரங்கம், ஸ்ரீநவனீத கிருஷ்ணன் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் கோவில் (1500 ஆண்டுகள் முன் கட்டப்பட்டது), நங்கநல்லூர், சென்னை.சிங்கபெருமாள் கோவில் ஸ்ரீஉக்கர நரசிம்மர், தாம்பரம், சென்னை, ஸ்ரீஅழகிய நரசிங்க பெருமாள் கோவில், எண்ணாயிரம், பாண்டிசேரி, ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் ஸ்வாமி கோவில், இராமாபுரம், சென்னை, ஸ்ரீநரசிம்மர் கோவில், பரிக்கல் ஸ்ரீயோக லக்ஷ்மி நரசிங்கப் பெருமாள் கோவில், உக்கடம், கோயம்பத்தூர், ஸ்ரீஉக்கர நரசிம்மர் கோவில், நாமக்கல், ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் திருகோவில், பொள்ளாச்சி, ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் கோவில் உக்கடம், கோயம்பத்தூர், ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் கோவில், காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி, ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் கோவில், அனேகபுரம், பென்னாகரம், தருமபுரி, தாடிக்கொம்பு சுதர்சன நரசிம்மர், திருகோஷ்டியூர், திருநீர்மலை சாந்த நரசிம்மர், திருவல்லிக்கேணி அழகிய சிங்கர், திருவாலி லக்ஷ்மி நரசிம்மர், நாகப்பட்டிணம் அஷ்டபுஜ நரசிம்மர் ஸ்வாமி , வேளுக்கை அழகிய சிங்கர், ஸ்ரீரங்கம் மேட்டழகிய சிங்கர் ஆனந்த லக்ஷ்மி நரசிம்மர் ஸ்வாமி திருக்கோவில், நாகப்பட்டு கிராமம் காஞ்சிபுரம் மாவட்டம் ஆகிய இடங்களில் நரசிம்மருக்கென்று சிறப்புக்கோயில்கள் உள்ளன.

பெருமை அறிவோம்...

**பண்பாட்டு ஆடை**

- திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரதப் பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.



# அனுமனுக்கு செந்தூரம் பூசுவது ஏன்?

– திரு. பொ. பாலாஜிகணேஷ், சிதம்பரம், 9842550844.



வனவாசம் முடிந்து ஸ்ரீராமனின் ஆட்சியின் கீழ் அயோத்தி மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். இராமனுடன் பக்தன் அனுமன் அவருக்கு தொண்டு செய்யும் விதத்தில் அயோத்தியிலேயே தங்கி இருந்தார்.

ஒரு நாள் இரவு அனைத்து பணிகளும் நிறைவு செய்து இராமன் சீதா தேவி அறைக்குள் நுழைந்தார். இராமன் நுழைய முயன்ற போது அவருடன் வந்த அனுமனும் நுழைய முற்பட்டார். அப்போது இராமர் அவரைத் தடுத்தார்.அதற்கு "சீதா தேவி போலவே தங்களின் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கும் தன்னை மட்டும் ஏன் தடுக்கிறீர்கள்?" என அனுமன் கேட்டார். இராமன், அவரைச் சமாளிக்கும் பொருட்டு, "சீதா தன் நெற்றியில் செந்தூரம் இட்டுக் கொண்டுள்ளார் அல்லவா. அதனால் உனக்கு அனுமதி இல்லை" என விளையாட்டாகக் கூறினார். மாருதி இதைக் கேட்டதும், அது என்ன பெருமை இருக்கிறது? சீதா தேவி செந்தூரம் அணிந்து உள்ளதற்கு காரணத்தைக் கூறுமாறு இராமனிடம் கேட்டார். இராமபிரானோ, இதற்கான காரணத்தை நாளை சீதையிடம் நீயே கேட்டுத் தெரிந்து கொள் என்றார்.

மறுநாள் சீதா தேவியை தரிசித்த அனுமன், தாயே! ஏன் செந்தூரம் இட்டுள்ளீர்கள் எனக் கேட்டார். ஒவ்வொரு திருமணமான பெண்ணும் தன் கணவர் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்பதற்காக இடுகின்றனர். நானும் ஸ்ரீராமர் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டி செந்தூரம் இடுகின்றேன் என்றார்.

இதைக்கேட்டதும் அனுமனும், உடனே வேகமாக கடை வீதிக்குக் கிளம்பிச் சென்றார். கடைவீதியில் இருந்து செந்தூரம் வாங்கித் தன் முகம் மற்றும் உடல் முழுவதும் பூசிக்கொண்டார். மேலும் கடையில் இருந்த செந்தூர மூட்டையைத் தரையில் கொட்டி அதில் புரண்டு தன் உடல் முழுவதும் படும்படி பூசிக்கொண்டார். அதே கோலத்துடன் மறுநாள் அனுமன் அயோத்தி அரண்மனைக்குச் சென்றார்.

அரசவையில் வீற்றிருந்த ஸ்ரீராமர்,சீதா தேவி முன் சென்று அனுமன் நின்றார். அனுமனைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே என்ன அனுமா! இப்படி வந்திருக்கிறாய் என்றார். அன்னை சீதா தேவி நெற்றியில் செந்தூரம் இட்டுக் கொள்வதால் தங்களின் ஆயுள் நீடிக்கும் எனக் கூறியதாகவும், அவர் இடும் சிறிய அளவிலான செந்தூரத்திற்கே உங்களின் ஆயுள் நீடிக்கும் என்றால்,உங்கள் மீது பக்தியும், அன்பும் வைத்துள்ள நான் உடல் முழுவதும் செந்தூரம் பூசிக்கொள்வதால் தங்களின் ஆயுள் பல காலம் நீடிக்கும் அல்லவா என்றார் அனுமன். இதை கேட்டுக் கண் கலங்கிய ஸ்ரீராமன் உன்னைப் போல ஒரு நண்பனை, பக்தனை அடைந்ததற்கு நான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்றார்.

அன்று முதல் அனுமனுக்கு செந்தூரம் அணிவிக்கும் வழக்கம் உண்டானது. செந்தூரம் அணிந்து வழிபடுவதால் நம் ஆரோக்கியம் சிறக்கும். நம் அன்புக்குரியவர்களின் ஆயுள் அதிகரிக்கும். செந்தூரம் அணிவதால் ஸ்ரீராம பிரானின் நேரடியான அருளைப்பெறலாம்.



# பஞ்ச நரசிம்மர் கோயில்கள்

## தமிழ்நாடு

– திரு.நெய்வாசல் நெடுஞ்செழியன்
94422 05862

ஆந்திர பிரதேசத்தின் கிருஷ்ணா நதிக்கரையில் புகழ்பெற்ற ஐந்து நரசிம்மர் ஆலயங்கள் அருகருகே இருப்பது போல, தமிழ்நாட்டில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழிக்கு அருகில் திருக்குறையலூர், திருமங்கைமடம், திருநகரி, திருவாலி என்னும் நரசிம்மத் தலங்கள் உள்ளன. ஒரு நரசிம்ம ஜெயந்தி அன்று அவர் தரிசனம் அளித்த இந்த நான்கு தலங்களிலும் உள்ள ஐந்து நரசிம்மரையும் தரிசிப்பவர்கள் அனைத்து இன்னல்களிலிருந்தும் மீள்வர் என்பது நம்பிக்கையாக உள்ளது.

**திருக்குறையலூர்:**

பஞ்ச நரசிம்மத் தலங்களில் முதல்தலம். ஆதி நரசிம்மத் தலம் என்ற பெயரைக் கொண்டது. பத்மபுராணம், நாரதபுராணம் ஆகியவை இத்தலத்தை ஸ்ரீபூரணபுரி, பூரண நரசிம்ம க்ஷேத்திரம் என்று புகல்கின்றன. திருக்குறையலூர் என்றால் குறைகளைக் குறைக்கும் ஊர் என்று பொருளாகும். தட்சனின் யாகத்தீயில் விழுந்து உயிர்துறந்த பார்வதி தேவியை நினைத்து சிவன் வருந்திக் கொண்டிருந்த காலத்தில் நரசிம்மர் தன் இருதேவியருடன் காட்சி அளித்து சிவனுக்கு ஆறுதல் அளித்ததலம். அதனால் யார் தங்கள் குறைகளைக்கூறி இத்தலத்திற்கு வந்து வழிபட்டாலும் அவர்களது குறைகளை இத்தலத்து நரசிம்மர் தீர்த்து வைப்பார் என்பது ஐதீகம். சுவாமிமலைக்கும் திருக்கூடலூருக்கும் இடையே காவிரியிலிருந்து பிரியும் மண்ணியாறு இத்தலத்தின் வழியாகச் சென்று கடலில் கலக்கின்றது. இத்தலத்தின் சிறப்பை வைணவ ஆசார்யர்கள் மண்ணியில் நீர்தேங்கும் குறையலூர், சீர்கலியன் தோன்றிய ஊர் என சிறப்பித்துப் பாடியுள்ளனர். தலத்தின் மூலவர் ஸ்ரீஉக்ரநரசிம்மர், தாயார் ஸ்ரீஅமிர்தவல்லித் தாயார். இங்கு நரசிம்மர் ஸ்ரீதேவி பூதேவி சமேதரராக காட்சி தருகிறார். திருமங்கை ஆழ்வார் அவதாரத் தலம் என்ற பெருமை கொண்ட இத்தலத்தில் அவருக் கும் குலசேகர ஆழ்வாருக்கும் சந்நதிகள் உள்ளன. கருவறை ஏழு படிக்கட்டுகளைக் கொண்டது. கருவறையில் உக்ர நரசிம்மராய் ஆஜானுபாவன தோற்றத்தில் வெள்ளிக்கவசத்தில் மார்பில் முக்கோண சக்கரத்துடனும், சாளக்கிராம மாலை உடனும் இரு தேவியருடன் காட்சி அளிக்கிறார்.

அமாவாசை, சுவாதி நட்சத்திரம், பிரதோஷம் ஆகிய நாட்களில் ஸ்ரீஉக்ர நரசிம்மருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் செய்யப்படுகின்றன. பித்ரு தோஷம் உள்ளவர்கள் அமாவாசை நாளில் இங்குவந்து நரசிம்மருக்கு திருமஞ்சனம் செய்து இயன்ற அளவிற்கு அன்னதானம் செய்து

வழிபட்டால் முன்னோர்களின் அருள் கிடைக்கப் பெற்று வம்சவிருத்தியுடன் சீரும் சிறப்புமாக வாழ்வர் என்பது ஐதீகம். நவக்கிரகதோஷம் உள்ளவர்கள் இத்தலத்திற்கு ஏழு அல்லது ஒன்பது வாரங்கள் வந்து தங்களது வயதின் எண்ணிக்கையில் நெய்தீபம் ஏற்றி வழிபட தோஷம் விலகும். பஞ்ச பூதங்களில் நெருப் பின் உருவாக ஸ்ரீஉக்ர நரசிம்மர் காட்சி அருளிய தலம் என்பதால் எதிரிகளின் தொல்லை ஒழியும் என்பது ஐதீகம். நரசிம்ம ஜெயந்தி அன்று இங்கு நடைபெறும் ஸ்ரீமகா சுதர்சன யாகத்தில் கலந்துக்கொண்டு சுவாமியை தரிசித்தால் நீங்காத செல்வம் கிடைக்கப் பெறலாம் என்கின்றனர். சீர்காழியிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் இவ்வாலயம் அமைந்து உள் ளது.

## திருமங்கைமடம்:

திருமங்கை ஆழ்வார் இறைவனால் ஆட் கொள்ளப்பட்ட திருத்தலமே திருமங்கைமடம். தற்காலம் மங்கைமடம் என அனைவராலும் அழைக் கப்படுகிறது. இரண்யாசுரனுக்கு வரம் அளித்த தோஷத்திற்குள்ளான சிவன், மயன் மற்றும் யமன் ஆகியோருக்கு ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீநரசிம்மராக திருக்காட்சியருளிய திருத்தலமான இத்தலம் பஞ்சநரசிம்மத் தலங்களில் இரண்டாவது தலமாகும்.

இக்கோயிலின் மூலவர் ஸ்ரீவீரநரசிம்மர், சாளக் கிராமக் கல்லால் ஆன திருமேனி. தாயார் ஸ்ரீசெங் கமலவல்லித்தாயார், உற்சவர் ஸ்ரீரங்க நாதர். திருமங்கை ஆழ்வார் நீலன் என்னும் குறுநில மன்ன னாக இருந்த காலத்தில் ஸ்ரீவைரநரசிம்மர் என போற்றப்பட்ட இந்த நரசிம்மர் பிறகு வீரநரசிம்மர் என்றழைக்கப்பட்டாராம். திருமங்கை ஆழ்வார் மன்னனாக இருந்த காலத்தில் தான் விரும்பிய பெண்ணை மணம் முடிப்பதற்காக இந்த நரசிம்மரை வணங்கி அன்னதானம் செய்தார் என்பதால் விரும்பியபடி மணவாழ்க்கை அமைய வேண்டு வோர், மணவாழ்வில் கசப்பு ஏற்பட்டு பிரிந்து மீண்டும் சேர விரும்பும் தம்பதிகள் இத்தலத்திற்கு வந்து அன்னதானம் செய்கின்றனர். பஞ்சபூத நரசிம்மத் தலங்களில் இது காற்றுத் தலமாகும். இங்கேயுள்ள ஸ்ரீசெங்கமல புஷ்கரணி மிகவும் விசேஷ சக்தி கொண்டது. ஆடி மாதத்தில் பிரம்மோத்ஸவம் பத்துநாள் விழாவாக மிகவும் விமரிசையாக நடை பெறுகிறது. ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி நாளில் 1008 கலச பூஜையும் திருவீதி உலா புறப்பாடும் சிறப்பாக நடைபெறுகிறது. மரண பயத்துடன் தவிப்போர், அரசியலில் வெற்றிபெற விரும்புவோர் இங்கே உள்ள ஸ்ரீசெங்கமல தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீநரசிம்ம ருக்கு துளசி மாலை சார்த்தி வில்வத்தால் அர்ச்சித்து, தயிர்சாதம் படையலிட்டு வழிபட்டால் விரைவில் வேண்டியது நடக்கும் என்பது ஐதீகம். சீர்காழியி லிருந்து பத்து கிலோமீட்டர், திருக்குறையலூரில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

## திருநகரி:

பஞ்ச நரசிம்மத் தலத்தில் இது மூன்றாவது மற்றும் நான்காவது திருத்தலம். இரண்டு நரசிம்ம மூர்த்தங்கள் ஒரே தலத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் சிறப்புப் பெற்ற திருத்தலம். பஞ்சபூத நரசிம்மத் தலங்களில் இது ஆகாயம் மற்றும் பூமித் தலமாகும். ஆகாய கோலத்தில் ஸ்ரீஹிரண்ய நரசிம்ம ரும், பூமிக்கோலத்தில் ஸ்ரீயோக நரசிம்மரும் திருமங்கை ஆழ்வாருக்குக் காட்சி தந்த அற்புத திருத்தலம். இந்த தலத்தின் மூலவர் ஸ்ரீகல்யாண ரங்கநாதர், தாயார் ஸ்ரீஅமிர்தவல்லித்தாயார். 108 திவ்ய தேசங்களில் இது 35வது திவ்ய தேசம். இரண்யனை வதம் செய்த கோலத்தில் காட்சி தரும் ஸ்ரீஹிரண்ய சம்ஹார நரசிம்மரை தரிசித்தால் எதிரிகளின் தொல்லை முழுவதுமாக அகலும் என்பதும், யோக நிலையிலுள்ள ஸ்ரீயோகநரசிம்மரை தொழுதால் மாணவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி ஞானத்துடன் திகழ்வர் என்பதும் ஐதீகம்.

திருமங்கை ஆழ்வார் மற்றும் குலசேகர ஆழ்வார் மங்களாசாசனம் செய்து ஸ்ரீநரசிம்ம மூர்த்தங்களை வணங்கி வழிபட்ட இந்த திருத்தலத்திற்கு திருமணத் தடையால் வருந்துவோர், மூன்று சனிக்கிழமைகள் வந்து மாலை சார்த்தி நெய் தீபம் ஏற்றி சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து ஸ்ரீகல்யாண ரங்கநாதரை வழிபட்டால் விரைவில் திருமண பாக்கி யம் கைக்கூடும் என்பதும், ஸ்ரீயோக நரசிம்மருக்கு செவ்வரளிப்பூ மாலை சார்த்தி நல்லெண்ணெய் மற்றும் இலுப்பை எண்ணெய் தீபமேற்றி வழிபட்டால் விரைவில் புதுவீடு கட்டும் யோகம் உண்டாகும். வியாபாரத் தடைகள் நீங்கும். எடுத்த காரியங்கள் யாவும் எளிதில் கைக்கூடும் என்பதும், ஹிரண்ய நரசிம்மருக்கு நீல நிற பூக்கள் சார்த்தி நல்லெண்

ணெய் தீபம் ஏற்றி வழிபட்டால் குடும்பத்தில் குழப்பங்கள் தீரும் என்பதும் ஐதீகம். இதனால் பிரதோஷம், சுவாதி நட்சத்திரம் ஆகிய நாட்களில் ஸ்ரீயோக நரசிம்மர், ஸ்ரீஹிரண்ய நரசிம்மர் மற்றும் ஸ்ரீகல்யாண ரங்கநாத பெருமாளைத் தரிசிக்க பக்தர்கள் திரளாக வருகின்றனர். சீர்காழியிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்திலும், மங்கை மடத்திலிருந்து ஆறுகிலோ மீட்டர் தூரத்திலும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**திருவாலி:**

பஞ்ச நரசிம்மத் தலங்களில் ஐந்தாவது திருத்தலம். புராணப்பெயர் ஆலிங்கணம். திருமகளான லக்ஷ்மிதேவியைத் தன் வலது தொடையில் வைத்தபடி ஆலிங்கண நிலையில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் காட்சி அளிப்பதால் இப்பெயர் ஏற்பட்டது. 108 திவ்ய தேசங்களில் இது 34வது திவ்யதேசம். பத்ரிகாசிரமத்திற்கு அடுத்ததாக பெருமாள் திருமந்திரத்தை தானே உபதேசம் செய்த இடமாதலால் இத்தலம் பத்ரிக்கு இணையாகப் போற்றப்படுகிறது. மகாலக்ஷ்மி ஆலிநாடான் எனப்பட்ட திருமங்கை மன்னனுக்கு அருள்புரியுமாறு சதாநேரமும் பெருமாளிடம் வேண்டினாள். அதன்பொருட்டு திருவாலியில் பூலண மகரிஷியின் மகளாக அவதரித்து தவம் செய்து வந்தாள். அவரது வேண்டுகோளை செயல்படுத்த வந்த பெருமாள் முதலில் லக்ஷ்மிதேவியை மணமுடித்துக் கொண்டு தேவராஜபுரம் என்ற இடத்திற்கு வரும்போது திருடனாக இருந்த திருமங்கை மன்னனால் தடுக்கப்பட்டு வழிப்பறிக்கு உள்ளானார். பெருமாள் திருமங்கை மன்னனின் காதில் எட்டு எழுத்து மந்திரத்தை உபதேசம் செய்து அவரை ஆட்கொண்டார். திருமங்கை மன்னன் பெருமாளிடம் வழிப்பறி செய்த மண்டபத்தை இன்றும் காணலாம்.

இத்தலத்து மூலவர் லக்ஷ்மி தேவியை அணைத்தவாறு காட்சி அளிப்பதால் அழகியசிங்கர் என்று அழைக்கப்படுகிறார். தாயார் ஸ்ரீஅமிர்தவல்லி மிகுந்த வரப்பிரசாதி. கைகூப்பி வணங்கிய திருக்கோலத்தில் தாயார் காட்சி தருவது எங்கும் கண்டிராத காட்சியாகும். உற்சவர் திருவாளி நகராளன், தீர்த்தம் இலாக்ஷிணி, புஷ்கரணி ஆகியவைகளாகும். குலசேகர ஆழ்வார் மற்றும் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது.

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மருக்குத் தாமரை மற்றும் நறுமணம் கமழும் மாலை அணிவித்து அர்ச்சனை செய்து வழிபட்டால் நினைத்த காரியங்கள் யாவும் ஈடேறும், இல்லத்தில் சுபிட்சம் நிலவும். வியாபாரத்தில் முதலீடு செய்பவர்கள், விவசாயம் செழிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் முதலீடு செய்யவிருக்கும் பணத்தையும் விதையையும் சுவாமியின் திருப்பாதத்தில் வைத்து வணங்கினால் தொழில் சிறக்கும். விவசாயம் தழைக்கும். மன வியாதிகள் உள்ளவர்கள் பிரதோஷ நாளில் இங்கு வந்து ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை வணங்கி அவருக்கு அபிஷேகம் செய்த எண்ணெயைத் தலையில் வைத்து நீராடினால் மனோவியாதிகள் அகலும், மனபலம் கூடும். சீர்காழியிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவிலும், மங்கைமடத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலும் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயங்களுக்குச் செல்ல சீர்காழியில் இருந்து பேருந்து மற்றும் ஆட்டோ வசதிகள் உள்ளன.



**திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்**

**ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு வருடத்திற்கு ஒரு முறை வைகாசி பௌர்ணமியில் நிறைவடையும் விதமாக தெப்போத்ஸவம் நடைபெறுகிறது.**

| | | |
|---|---|---|
| 30-05-2023 | செவ்வாய் | ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி |
| 31-05-2023 | புதன் | ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி |
| 01-06-2023 | வியாழன் | ஸ்ரீபத்மாவதி தாயார் |
| 02-06-2023 | வெள்ளி | ஸ்ரீபத்மாவதி தாயார் |
| 03-06-2023 | சனி | ஸ்ரீபத்மாவதி தாயார் |



## ஜோதிட சாஸ்திரம்

# செவ்வாய்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை, 97862 80577.

ஒவ்வொரு வீட்டிலும் செவ்வாய் இருந்தால் என்ன பலன் என்பதை அறிந்து கொள்வோம்.

செவ்வாய் 1ல் இருந்தால் தலையில் அடிபடும். செவ்வாய் ஒன்றாம் வீட்டில் இருந்து 7ஆம் பார்வையாக 7ஆம் வீட்டை பார்ப்பதால் திருமண வாழ்வில் சங்கடங்கள் ஏற்படும். செவ்வாய் முதல் வீட்டில் இருப்பதால் மூர்க்கதனமாக கோபம் வரும். தாயாருக்கு தீங்கு விளைவிக்கும். கோபம் அதிகரிக்கும். இளம்தோற்றமாக காணப்படும். உடம்பில் உஷ்ணம் காரணமாக கட்டி ஏற்படும். நல்ல தைரியசாலிகளாக இருப்பார்கள். ஏதாவது ஒரு விதத்தில் தலையில் அடி படும். செவ்வாய் தசையில் எச்சரிகையாக இருக்க வேண்டும். செவ்வாய்க்கு சொந்த வீடாக அல்லது உச்ச வீடாக இருந்தால் நல்லது நடக்கும்.

செவ்வாய் 2ஆம் வீட்டில் இருந்தால் வாக்கில் கடுமை இருக்கும். பேச்சில் சண்டை வரும். செவ்வாய்க்கு சொந்த வீடாகவோ உச்சவீடாக இல்லாவிட்டால் அவர் சொல்லே அவருக்கு விரோதமாக ஆகும். கையில் காசு தங்காது. செவ்வாய் இரண்டில் இருப்பதால் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள், கண்ணில் தொந்தரவு இருக்கும். செவ்வாய் பலம் பெற்று இருந்தால் நல்லது நடக்கும். செவ்வாய் இரண்டில் இருப்பதால் தோஷம் ஏற்படும்.

செவ்வாய் 3ஆம் வீட்டில் இருந்தால் நல்ல தைரியசாலியாக இருப்பார். காதில் தொந்தரவு இருக்கும். செல்வம் நிறைய கிடைக்கும். நல்ல அறிவாற்றல் கிடைக்கும். உடம்பு நல்ல உறுதியாக இருக்கும். இளைய சகோதரருக்கு கெடுதல் செய்யும். சிலபேருக்கு இளைய சகோதர, சகோதரிகள் இருக்க மாட்டார்கள். 3ஆம் வீட்டில் செவ்வாய் பலம் பெற்றால் நல்ல வாழ்க்கை அமையும். 3ஆம் வீட்டு செவ்வாய் மூலம் தாய்நலம் கெடும்.

செவ்வாய் 4ஆம் வீட்டில் இருந்தால் தாய் வீட்டின் சொத்து கிடைக்கும். தாயின் உடல் நிலை மோசமாக இருக்கும். கணவன் மனைவி இடையே சண்டை சச்சரவு இருக்கும். சொத்துக்கள் சேரும். 4ஆம் வீட்டு செவ்வாய் பலம் குறைந்தால் வாழ்க்கையில் வசதி வாய்ப்பு குறையும். மார்பில் வலி ஏற்படும்.

செவ்வாய் 5ஆம் வீட்டில் இருந்தால் புத்திர தோஷம் ஏற்படும். புத்தி மங்கும். குழந்தைகளால் சண்டை சச்சரவுகள் ஏற்படும். வயிற்றுவலி ஏற்படும். எதிரிகளால் தொல்லை வரும். பணவரவு இருக்காது. 5ஆம் வீடு செவ்வாய்க்கு சொந்த வீடாகவோ அல்லது உச்சவீடாகவோ இருந்தால் தடைகள் அனைத்தும் அகலும். 5ஆம் வீடு நாம் எந்த தெய்வத்தை வணங்க வேண்டும் என்று காட்டும் இடம் ஆகையால் செவ்வாய் 5ல் இருந்தால் சுப்பிரமணியரை வணங்க வேண்டும்.

செவ்வாய் 6ஆம் வீட்டில் இருந்தால் எதிரிகளை வெற்றி கொள்ளும் தைரியம் இருக்கும். நல்ல சொத்துக்கள் சேரும். தாய்மாமனுக்கு தொல்லை

தருவார். இரத்தம் மாசுபடும் அதனால் உடலில் கட்டி ஏற்படும். நல்ல கற்றவர்களிடம் தொடர்பு ஏற்படும். புகழ் ஏற்படும். 6ஆம் வீட்டு செவ்வாயினால் பெரும் பொருட் செலவு ஏற்படும்.

செவ்வாய் 7ஆம் வீட்டில் இருந்தால் 7ஆம் பார்வையாக லக்கினத்தைப் பார்ப்பதால் தலையில் அடிபடும். திருமண வாழ்க்கையில் பிரச்சனை ஏற்படும். செவ்வாய்க்கு நட்பு வீடாக இருந்தாலும் சொந்த வீடாக அல்லது உச்ச வீட்டில் இருந்தால் பிரச்சனைகள் இருக்காது. பெண்களால் பிரச்சனை உண்டாகும். இவரிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள் முன் கோபக்காரர்களாக இருக்கக்கூடும்.

செவ்வாய் 8ஆம் இடத்தில் இருந்தால் கண் பார்வை கெடும். ஜெயிலுக்குச் செல்ல நேரிடும். இரத்த சம்பந்தமாக பிரச்சினை ஏற்படும். கடன் பளு ஏற்படும். ஆயுள் குறையும். கோபம் அதிகம் வரும். சகோதரர்களின் நலம் கெடும். பொருளாதாரம் அதிகம் பாதிக்கப்படும்.

செவ்வாய் 9ஆம் இடத்தில் இருந்தால் தந்தையாரின் நலம் கெடும். தந்தைக்கும் இவருக்கும் சண்டை சச்சரவு இருந்து கொண்டே இருக்கும். நற்பணிகள் செய்ய மாட்டார். கொடிய செயல்கள் செய்ய வைப்பார். 9ஆம் வீட்டு செவ்வாய் ஆட்சி அல்லது உச்சம் பெற்றால் நல்ல நிலைக்கு உயர்த்துவார்.

செவ்வாய் 10ஆம் இடத்தில் இருந்தால் கனரக வாகனங்கள் தொழிற்சாலையில் உயர்ந்த பதவியில் அமர வைப்பார். பதவியில் தலைமை இடம் தேடி வரும். நெருப்பு மூலமாகவும் வருமானம் பெருகும். பெரிய மனிதர்களிடம் இருந்து பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

செவ்வாய் 11ஆம் இடத்தில் இருந்தால் பெரும் பணக்காரராக மாற்றுவார். மகிழ்ச்சி நிறைந்து இருக்கும். பெரும் செலவு செய்து தொழிலில் முன்னேற்றம் காண வைப்பார். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மூத்த சகோதர சகோதரிகளிடம் சண்டை சச்சரவு ஏற்படும்.

செவ்வாய் 12ஆம் வீட்டில் இருந்தால் கெடுதல் அதிகம் இருக்கும். சிறை செல்ல நேரிடும். பெண்கள் மூலம் பொருளாதார இழப்பு ஏற்படும்.

நமது வீட்டில் எல்லாம் திருமண காலங்களில் பெண் பார்க்கும் அல்லது மாப்பிள்ளை பார்க்கும் படலத்தில் தவறாது அடிபடும் வார்த்தை செவ்வாய் தோஷம் இருக்கிறதா அல்லது இல்லையா என்பது தான். இந்த தோஷம் ஒவ்வொரு ஜோதிடரிடமும் வேறுபடும். ஒருவர் தோஷம் இருக்கும் என்பார். இன்னொருவர் தோஷம் இல்லை என்பார். செவ்வாய் உச்சவீட்டில் இருக்கிறது அதனால் தோஷம் கிடையாது என்பர் அல்லது செவ்வாய் நீச வீட்டில்



அங்காரகன் (செவ்வாய் தோஷம் நிவர்த்தி அடைய)

## தோஷம் நிவர்த்திக்கு...

*ஓம் வீரத்வஜாய வித்மஹே*
*விக்ன ஹஸ்தாய தீமஹி*
*தன்னோ பௌமஹ் ப்ரசோதயாத்*
*ஓம் அங்காரகாய வித்மஹே*
*சக்திஹஸ்தாய தீமஹி*
*தன்னோ பௌமஹ் ப்ரசோதயாத்*
*ஓம் அங்காரகாய வித்மஹே*
*சக்திஹஸ்தாய தீமஹி*
*தன்னோ குஜஹ் ப்ரசோதயாத்*
*ஓம் லோஹிதாங்காய வித்மஹே*
*பூமிபுத்ராய தீமஹி*
*தன்னோ குஜஹ் ப்ரசோதயாத்*





இருக்கிறது. அதனால் தோஷம் கிடையாது என்பார்கள். இதனைப்பற்றி ஆராய்வதற்கே பல வழிகள் இருக்கிறது.

நான் சொல்ல வந்தது ஒன்பது கிரகங்களில் நீங்கள் கேட்டவுடன் அள்ளி வழங்குபவர் செவ்வாய் மட்டும் தான். ஏனென்றால் செவ்வாய்கிரகம் ஒரு அக்னி கிரகம். அது மிகவும் வீரியத்தன்மை வாய்ந்த கிரகம். நெருப்பு உடனே பற்றிக் கொள்ளும் தன்மையினால் செவ்வாய் மட்டும் உடனே தருபவர். வேறு எந்த கிரகத்திடம் கேட்டாலும் பலன் உடனே நடக்காது. ஆனால் செவ்வாயிடம் மட்டும் கேட்டால் உடனே நிறைவேறும். நீங்கள் இதனை ஒரு ஆய்வாகவே எடுத்துக்கொள்ளலாம்.

செவ்வாயின் கடவுளாகிய முருகனிடம் ஏதோ ஒரு வேண்டுதலுடன் கேளுங்கள் அந்தக் காரியம் நிச்சயம் நடந்தேறும். உங்கள் வேலை உடனே நடக்க செவ்வாய்க்கிழமையைப் பயன்படுத்துங்கள். உங்களுக்கு செவ்வாய்தோஷம் இருந்தால் ஒன்பது வாரம் செவ்வாய்க் கிழமை விரதம் இருந்து பாருங்கள். விரதத்தின் தன்மை பொறுத்து தோஷம் நீங்கி நல்லது நடக்கும். முருகனை முழு மனதுடன் வழிபட்டு அனைத்தையும் பெறுவோம்.

தொடரும்....


## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி



பகவத் இராமாநுஜாசார்யர், திருமலை திருப்பதி பகுதிக்கு வந்து அன்று அரசனாக இருந்த தன் சீடனான யாதவராஜாவின் உதவியுடன் புதிய மூலமூர்த்தியினை நிர்மாணம் செய்து, அத்துடன் திருச்சித்திரக்கூடத்திலிருந்து எழுந்தருளப் பண்ணின உத்ஸவமூர்த்திகளை சேர்த்து திருப்பதியில் உள்ள ஒரு திருக்கோயிலில் பிரதிஷ்டை பண்ணி, திருமலை போன்று வைகானசாகம முறைப்படி பூஜைகள் செய்வித்தார். மற்றும் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமியின் ஐச்வர்ய அபிவிருத்திக்காக ஸ்வாமியின் தெற்கு பாகத்தில் ஒரு சந்நிதியில் ஸ்ரீஆண்டாள் தாயாரையும் பிரதிஷ்டைப் பண்ணினார். அன்று முதல் ஸ்ரீராமாநுஜரின் கட்டளைப்படி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமிக்கும் திருவேங்கடமுடையானுக்கு நடத்துவது போலவே நித்திய உத்ஸவம், வாரோத்ஸவம், மாத உத்ஸவம், வருட உத்ஸவங்களை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் நிர்வகித்து வருகின்றனர்.

பல உப ஆலயங்களிலும் இந்த ஆலயத்தில் அமைந்துள்ளன.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 82



**இடமிருந்து வலம்**

1. பாரதப்போர் நடந்த இடம்...(7)
4. தேர் ஓட்டுபவர்......(3)
6. கிருஷ்ணரின் எளிய தோழர்....(4)
8. கண்ணனின் கொடிய மாமன்....(4)
9. கீதையைக் கேட்டவன்....(5)
13. துளசிக்காடு (கிருஷ்ணர் லீலைகள் புரிந்த இடம்).....(7)
14. பாண்டவர்களில் மூத்தவர்....(4)
15. கொடியவர்களைக் கொள்வது.....(3)
16. கிருஷ்ணர் ஆட்சி செய்த நகர்.....(4)
17. கோவிந்தனிடம் செலுத்த வேண்டியது.....(3)
21. ஸ்ரீகிருஷ்ண பகவான் ஒரே விரலால் தூக்கிய மலை.....(8)
23. கிருஷ்ண ஜன்ம பூமி.....(3)
25. யுத்தம்......(2)
26. மகாபாரதத்தில் வள்ளல்....(4)

**வலமிருந்து இடம்**

8. சிறந்த பக்தியால் நற்....(2) பெறலாம்.
10. கிருஷ்ணரின் வேறு பெயர்.....(4)
11. கண்ணன் மேய்த்தது....(2)
14. அதர்மத்திற்கு எதிர்....(4)
18. கிருஷ்ணர் பிறந்த திதி.....(4)
21. ஆண்டாளின் பெயர்....(2)
23. பாலகிருஷ்ணன் வாயில் போட்டது....(2)
27. திரௌபதையின் மறுபெயர்.....(4)

**மேலிருந்து கீழ்**

2. கிருஷ்ணரின் ஒரு மனைவி.....(4)
3. தேர்......(3)
4. பெருமாளின் கையில் உள்ள வில்.....(5)
5. கோவிந்தன் கோவில் கொண்ட நகர்....(5)
12. கண்ணன் அளித்த புனித நூல்....(6)
18. பக்தர்களிடம் இறைவன் காட்டும் பரிவு....(3)
19. கீதையில் உள்ள செயல்யோகம்....(3)

**கீழிருந்து மேல்**

7. பாஞ்ச ஜன்யம்....(3)
20. பிதாமகர்....(4)

தொகுப்பு :
திரு. டி. ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய
41ம் பக்கம்
பார்க்கவும்...

21. பக்தர்கள் உகந்து போற்றும் வேங்கடவனின் பெயர்...(5)
22. வெற்றிக்கு கிருஷ்ணர் கையாளும் யுக்தி.......(5)
24. அறிஞர்களுக்கானது ...(2) யோகமே
27. இளம் வயது கண்ணன்.....(7)

## பிளாஸ்டிகிற்கு தடை

திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்கள் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள்.

வைஷ்ணவம் என்பது விஷ்ணு ஒருவரையே இறைவனாக ஆராதிக்கும் மதமாகும். நந்தவரீக வம்சத்தில் ஒரு ஸ்மார்த்தராகப் பிறந்து, அகோபில மடத்தில் தீக்ஷை பெற்றபின் ஒரு தீவிர வைஷ்ணவனாக மாறி, விஷ்ணு பக்தியில் தோய்ந்து அற்புதமான பாடல்களை அவனுக்கு அளித்துள்ளார் அன்னமய்யா. அவரது விஷ்ணு பக்தி, ஆன்ம முன்னேற்றம் இவை அவரது பாடல்களில் எதிரொலிக்கிறது. பக்தியே கவிதையாக மடைதிறந்த வெள்ளம் போல் பெருகி நம்மையும் ஆன்ம வெள்ளத்தில் அழுத்தி ஆனந்தத்தில் திக்கு முக்காட வைக்கிறது.

*''தேவ தேவோத்தமா நாகுதிக்கு நீவே யெப்புடு
ஏ விவரமு தெலியனேமி சேதுனய்யா''*

–தொகுதி – 15, பாடல் எண். 326

பாவங்கள் தொலைந்தாலன்றி புண்யங்களின் பலன் கிட்டாது. ஆசைகளை விட்டால் அன்றி சாந்தி கிடைக்காது. ஆசைகளை விட்டாலன்றி விரக்தி கை கூடாது. கொடுத்து வைத்திருந்தால் மட்டுமே ஞானத்தின் ருசி தெரியும். நம் வேடங்களை களைந்தாலன்றி விவேகம் நம்மை நெருங்காது. அசத்தியம் (பொய்) இருந்தால்தான் சத்யத்தை அறியலாம். துன்பத்தை அனுபவித்தால்தான் இன்பம் என்பது தெரியும். இவற்றை எல்லாம் கடந்து என்னை இத்துணை காலம் காப்பாற்றி வந்துள்ளாய். இனி வரும் காலங்களிலும் நான் உன்னையே பற்றியிருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டுமய்யா? வேங்கடவா! என்ற இப்பாடலில் அவரது சரணாகதியை உணர்கிறோம்.

ஒரு வைஷ்ணவனாவது அத்தனை சுலபமா என்ன? என்ற கேள்வியையும் கேட்டு அதற்கான பதிலையும் அவரே அளித்திருக்கிறார் பாருங்கள்.

*''சுலபமா மனுஜுலகு ஹரி பக்தி
வலனொந்தி ஹரிகதா வைஷ்ணவு லவுட''*

– பாடல் என் 144

கோடானுகோடி பிறவிகள் எடுத்து கர்மபந்தங்கள் அனைத்தும் தொலைந்த பின்னரே வைஷ்ணவனாக முடியும்.

எல்லாப் பிறப்பும் பிறந்து, இளைத்து, மானுடப் பிறவிகளும் பல எடுத்து, லட்சக்கணக்கான யாகங்கள் இயற்றி, தந்திரங்கள் இவற்றையெல்லாம் கற்று சாதித்து தூய்மையடைந்த பின்னரே வைஷ்ணவனாக முடியும்.

ஊர்கள் பலவும் திரிந்து, எண்ணற்ற தீர்த்தங்களில் நீராடி, கோயில்களை தரிசித்த பின்பும் திருவேங்கடத்தீசனான அந்த கரிராஜ வரதனின் அருள் இருந்தால்தான் ஸ்ரீவைஷ்ணவனாக முடியும் என்கிறார். எங்கும், எதிலும் வேங்கடவா நீ அந்தர்யாமியாக இருப்பதால் நீ ஒருவனே கதி என்று உன்னை வணங்குவதே எனது தர்மம் என்பவர், தனித்திருக்கும் போதும் பதியையே





அந்தயு நீவே ஹரி புண்டரிகாக்ஷா
செந்த நாகு நீவே ஶ்ரீரகு ராமா (பல்லவி)

குலமுனு நீவே கோவிந்துடா நா
கலிமியு நீவே கருணாநிதே
தலபுனு நீவே தரணீதராநா
நெலவுனு நீவே நீரஜநாபா
தனுவுனு நீவே தாமோதரா
முனிகியு நீவே மதுசூதனா
வினிகியு நீவே விட்டலுடா - நா
வெனக முந்து நீவே விஷ்ணுதேவுடா
புட்டுகு நீவே புருஷோத்தமா, கொன
நட்ட நடுமு நீவே நாராயணா
இட்டெ ஶ்ரீவேங்கடேஸ்வருடா நாகு
நெட்டென கதி இங்க நீவே நீவே.

– அன்னமய்யா பகுதி 1 – பாடல் 385



எண்ணி மகிழ்ந்திருக்கும் சதியை போன்று உள்ளேன். வேறெந்த கடவுளரையும் வணங்காது உன்னையே வணங்கி ஒரு பதிவிரதை (கற்புடை மனைவி) போன்றுள்ளேன். வேங்கடவா! உன்னையே குருவாகவும் வரித்து உனக்கு சேவை செய்யும் சிஷ்ய தர்மத்தை விழைகிறேன். எனவே எனக்கு ஈஸ்வர, நிரீஸ்வர வாதங்கள், சத்யம், ஞானம், ஆனந்தம் என்கிற விவேக தர்மங்களில் என் மனது ஈடுபடவில்லை என்பதை ஆணித்தரமாக அறைந்து கூறுகிறார்.

அவரது ஹரிபக்தி படிப்படியாக உயர்ந்து காணுமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவன் வேங்கடவனாகவே உணர்கிறார். இவ்வையகமே விஷ்ணு மயமாக இருக்கும்போது ஏனைய தெய்வங்களை வணங்குவது எதற்கு? காண்பதெல்லாம் திருமலைவாசனின் பிம்பங்களே என்ற உணர்வு வந்து விட்டால் போதும் நீங்கள் புண்ணியம் செய்தவர்கள். அப்போது நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் அவனுக்கே அர்ப்பணமாகி விடும் என்கிறார். நீயே எனக்கு எல்லாம் எனது குலம், தனம், என் இருப்பு, எல்லாம் நீயே. வேங்கடவா! நீயே எனக்கு கதி என்று கூறும் பாடல் மிக எளிமையானது. இதை ஒரு முறைபடித்தாலே அவனது நாமங்கள் பலவற்றையும் நாம் நவின்றவராவோம். அதைத் தமிழில் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. படித்து மகிழுங்கள். வேறெந்த தெய்வங்களையும் வணங்காது வேங்கடவனையே எப்போதும் மனதால் நினைத்து, சித்தத்தில் இருத்தி, ஆன்மாவில் சுகித்து மேலான பரமானந்தத்தில் திளைத்திருப்பதே அன்னமய்யா சித்தாந்தம் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அவரது ஹரி பக்தியின் பரிணாம நிலையை படம் பிடித்துக் காட்டும் பாடல்கள் பல அன்னமய்யா சங்கீர்த்தனத்தில் கொட்டிக் கிடக்கின்றன.

**– திருமதி ராதா ராமநாதன்,திருப்பதி,**
**9393609240**

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

- திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர்கள். தேவையில்லாமல் குழாயைத் திருப்பி விட்டுச் செல்லாதீர்கள்.
- திருமலையில் மின்சாரத்தை வீணாக்காதீர்கள்.
- வெளியே செல்லும் போது மின்விசிறிகள், விளக்குகள், செல்போன் சார்ஜிங் ஆகியவற்றை நிறுத்தி விட்டுச் செல்லவும்.
- திருமலையில் அன்னப்பிரசாதத்தை வீணாக்காதீர். வேண்டிய அளவிற்கே வாங்கிக் கொள்ளவும்.



அலசுவோம்... அறிவோம்...
ஆதிகாவிய நாயகர்களை...

# விசுவாமித்திரர் என்னும் அஸ்திவாரக்கல்



எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன்னுடைய அவதாரம் ஒவ்வொன்றினுக்கும் உரிய கதை வடிவத்தையும், கதாபாத்திரங்களையும் தன்னு டைய திவ்விய சங்கல்பத்தினால் முன்கூட்டியே திட்டமிட்டு விடுகின்றான்.

ஸ்ரீமத்ராமாயணத்திலும், ஸ்ரீராமாவதாரத்திற்குப் பிறகான நிகழ்வுகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லுவதற்கு ஏற்ற பாத்திரமாக எம்பெருமான் விசுவாமித்திரரைத் தேர்ந்தெடுத்துள்ளான். சுதந்திரப் போராட்ட வீரரும், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலுமாக விளங்கிய சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தாம் எழுதியுள்ள இராமாயண நூலில் "ஸ்ரீராம சரித்திரம் என்ற மஹாகோபுரத்திற்கே விசுவாமித்திரர்தான் அஸ்திவாரக்கல்" என்று கூறியிருப்பதிலிருந்தே இம்முனிவருடைய பெருமைகளை நம்மால் உணர முடிகின்றது.

ஸ்ரீமத்ராமாயணத்தில் இறுதி நோக்கமாகிய ராவணசம்ஹாரத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு சூட்சுமமான தொடக்கமாகவே தாடகை வதத்தைப் பார்க்க முடிகிறது. அந்தத் தாடகை வதத்திற்கான முன் முயற்சியைச் செய்யும் பொறுப்பை விசுவாமித்திரர் திறம்படவே நிறை வேற்றுகின்றார். அடர்ந்த வனத்தில் தாம் செய்ய இருக்கும் யாகத்தினை அரக்கர்களின் உபத்திர வத்திலிருந்து காத்திடுவதற்காக ஸ்ரீராமபிரானைக் கேட்கிறார் விசுவாமித்திரர்.

ஆனால் தசரதர் தயங்குகின்றார். அறுபதினா யிரம் வருடங்கள் தவமிருந்து பெற்ற குழந்தையை விசுவாமித்திரருடன் அனுப்புவதற்கு தசரதரின் மனம் ஒப்புக்கொள்ள மறுக்கிறது. அதே சமயம் விசுவாமித்திரரின் கோபத்தை நினைத்தால் பயமா கவும் இருக்கிறது. பின்னர் தம்முடைய குலகுரு வாகிய வசிஷ்டரின் அறிவுரைப்படி ஸ்ரீராம பிரானையும், உடன் பிரியாத சகோதரனாகிய லட்சுமணனையும் விசுவாமித்திரருடன் அனுப்பி வைத்தார் தசரதர்.

பிரம்மசாரியாகத் தன்னுடன் அழைத்துவந்த தசரத புத்திரனை மிதிலைக்கே அழைத்துச் சென்று கல்யாணராமனாகத் திருப்பிக் கொடுத்தார். தசரதருடைய மற்ற மூன்று புதல்வர்களாகிய லட்சுமணன், பரதன், சத்ருக்னன் ஆகியவர்களுக்கும் ஊர்மிளா, மாண்டவி, சுருத கீர்த்தி ஆகிய மூவரும் மணப்பெண்களாக அமை யுமாறு நடத்திக் கொடுத்து ஒன்றுக்கு நான்கு மடங்காக நன்மை புரிந்தார் விசுவாமித்திரர்.

"கோபம் இருக்கும் இடத்தில் குணமும் இருக்கும்" என்ற பழமொழியை மெய்ப்பிப்பது போன்று தாம் கூறுவதை மதிப்பவர்களுக்குப் பல மடங்காக அனுக்கிரகம் செய்பவரே விசுவா மித்திரர். விசுவாமித்திரரின் வார்த்தைப்படி தாடகையைக் கொன்றால் அவர் மனம் மகிழ்ந்து பல உயர்ந்த அஸ்திரங்களுக்குரிய மந்திரங்களை உபதேசிக்க, அவற்றை ஸ்ரீராமர் தாம் கற்றதோடு தம்முடைய தம்பி லட்சுமணனுக்கும் கற்றுக்



கொடுத்தார். செல்லும் வழியில் எதிர்ப் பட்ட தாடகையை ஸ்ரீராமபிரான் கொன் றார். பின்னர் விசுவாமித்திரரின் யாகத்தை அழிக்க வந்த மாரீசனை வெகு தூரத்தில் கொண்டு போய்த் தள் ளியதுடன், சுபாகுவையும் கொன்றார்.

தம்முடைய யாகம் விக்கினமின்றி நடைபெற்றதால் மிகவும் மகிழ்ச்சி அடைந்த விசுவாமித்திரர் இராம லட்சுமணர்களை மிதிலையை நோக்கி அழைத்துச் சென்றார். செல்லும் வழியில்தான் ஸ்ரீராமபிரானின் திருவடி பட்டு அகலிகை சாபவிமோசனம் பெற்றாள்.

அகலிகைக்கும் கௌதமருக்கும் மகனாகப் பிறந்த சதானந்தருடைய ஆசிரமத்திற்கும் ஸ்ரீராமலட்சுமணர் களை விசுவாமித்திரர் அழைத்துச் சென்றார். அவர்களை வரவேற்று உப சரித்த சதானந்தர், விசுவாமித்திரரின் தவத்தின் பெருமையை ஸ்ரீராம லட்சுமணர்கள் இருவருக்கும் எடுத்து உரைத்தார்.

வசிஷ்டருடன் போர் புரிந்த விசுவாமித்திரரின் பிரம்மாஸ்திரம் பயனற்றுப் போனதால் தவம் செய்யச் சென்ற விசுவாமித்திரர், காமம், மோகம், கோபம், பசி ஆகிய உணர்ச்சிகளை எல்லாம் வென்று பெரும் தவத்தினை இயற்றி, தவ வலிமையினால் தம்மைத் தோற்கடித்த வசிஷ்டரின் திருவாக்கிலிருந்தே "பிரம்ம ரிஷி" பட்டத்தை இவர் பெற்றது இன்றைய இளைய சமுதாயத்தி னருக்கு மிகப் பெரிய முன்னுதாரணமாகும்.

ஸ்ரீமத்ராமாயணத்தின் முதல் பகுதியில் மட்டும் வந்து செல்கின்ற விசுவாமித்திரரால் நடைபெற்ற ஸ்ரீசீதாராம திருக் கல்யாணத்திற்கு இணையான மற்றொரு பெரிய நன்மையான "சுப்ரபாதம்" என்ற மகத்தான சேவையாகும்.

தசரதர் அனுப்பி வைத்த ஸ்ரீராமலட்சுமணர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வனத்தை நோக்கிக் கிளம்பிய விசுவாமித்திரர் இரவு நேரம் ஆகிவிட்டதால் சரயூ நதி தீரத்தில் தங்கினார். புனிதத் தாயாகிய கௌசலையின் திருவயிற்றில் அவதரித்துப் பஞ்சணையின் மீது படுத்துப் பழகி எம்பெருமான் ஸ்ரீராமபிரான் அன்றிரவு தம் தம்பி லட்சுமணனுடன் புல்தரையில் படுத்துறங்கினான். மறுநாள் விடியற்காலையில் "கௌசல்யா சுப்ரஜா ராம!" என்று ஸ்ரீராமபிரானை நம் விசுவாமித்திரர் துயில் எழுப்பியதால் அன்றோ "சுப்ரபாதம்" என்ற ஸ்தோத்திரமும், இன்று நம் தேசம் முழுவதும் உள்ள திருக்கோயில்களில் நாமெல்லாம் அன்றாடம் சேவித்து அனுபவிக்கும் "சுப்ரபாத சேவை" யும் நமக்குக் கிடைத்திருக்கின்றன?


*"கௌசல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே*
*உத்திஷ்ட நர சார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்னிகம்"*

என்று விசுவாமித்திரர் அன்று மனதார அனுபவித்துக் கூறிய சுலோகத்தை முதலாவது சுலோகமாகக் கொண்டு இன்று பல்வேறு திவ்யதேசங்களிலும் எழுந்தருளியுள்ள எம்பெருமான் களுக்கென்று தனித்தனியே "ஸ்ரீவேங்கடேஸ்வர சுப்ரபாதம்" உள்ளிட்ட சுப்ரபாதங்கள் பல்வேறு ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர் களால் அருளப்பட்டு, அந்தந்த திவ்ய தேசங்களில் அன்றாடம் பக்தியுடன் ஓதப்படுகின்றன.

இவ்விதமாக, ஸ்ரீமத் ராமாயணத்துக்கு மட்டும் அல்லாமல், இன்று நாடு எங்கிலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் சேவித்துப் பேரா னந்தமடைகின்ற சுப்ரபாத சேவைக்கும் நம் விசுவாமித் திரரே அஸ்திவாரக்கல் என்று கூறலாம் அல்லவா!



தொடர்ந்து அலசுவோம்...





மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

படைப்புக் கடவுளான பிரம்மா உறக்கத்தில் நழுவிக் கொண்டதும், பூலோகத்தில் மிகப் பெரிய மாற்றங்கள் உண்டாயின. சூரியன் வெப்பச் சுடரால் உலக உயிர்கள் அனைத்தையும் சுட்டெரித்து, பிரளய காலத்தில் அகாலத் தாண்டவம் ஆடும் ஜுவாலைகளைப் போல, அதற்கு எம்மாத்திரமும் குறைவில்லாத தீப்பிழம்புகளைக் கக்கிக் கொண்டு இருந்தது. அத்தீப்பிழம்பில் சிக்கி அசேதனம் சேதனம் ஆகியவைகள் கருகிப் போயின. அதோடு நெருப்புக்குக் காற்றும் துணையானது. சப்த வாயுக்களும் சுழன்று அடித்தது. கார்மேகங்கள் இடியும் மின்னலுமாக யானை துதிக்கையைப் போன்று சரமழை பெய்தது. பிறகென்ன? எங்குப் பார்த்தாலும் தண்ணீர் தண்ணீர் எங்கும் வெள்ளக்காடு. அளவுக்கு அதிகமான தண்ணீர் பாரத்தைத் தாங்க முடியாமல் பூமி குமுறியது. இது போன்ற ஒரு சூழ்நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இரண்யாட்சன் என்ற அசுரன் பூமியைக் கடலுக்கு அடியில் ஏழுலோகத்தில் ஒன்றாகிய ரசாதலத்தில் கொண்டு போய் வைத்தான். இப்படியே பல காலங்கள் கடந்தன. நான்முகனான பிரம்மாவிற்கு இரவு நேரம் முடிந்தது. பிரம்மா உறக்கம் கலைந்து எழுந்து மீண்டும் தன் படைப்புத் தொழிலை தொடங்க எண்ணினார்.

இவற்றையெல்லாம் தன் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணு உலக நன்மைக்காக வேண்டி வராக அவதாரத்தை எடுத்தார். அந்த வடிவத்தோடு ரசாதலத்திற்குச் சென்றார். ரசாதலத்தில் கிடந்த பூமியை மேலே கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கையில், அங்கு வந்த இரண்யாட்சன் அதைத் தடுத்தான். இருவருக்கும் பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. முடிவில் வராக வடிவமான விஷ்ணு தன் கோரைப்பற்களால் இரண்யாட்சன் தலையைத் துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தினார். கொடூரமாக நடைபெற்ற இந்த யுத்தத்தில் பீறிட்டு வந்த குருதியினால் அந்தப் பகுதி முழுவதும் சிகப்பு நிறமாகக் காட்சியளித்தது. இந்தக் காட்சியைக் கண்ட தேவர்கள் அச்சம் கொண்டனர். ஆனால், சிறிது நேரத்திற்குப் பிறகு தம்மைத் தேற்றிக் கொண்டு தம்முடைய ஞானக் கண்களால் ரசாதலத்தில் நடந்தேறியதை எல்லாம் அறிந்து மனம் அமைதி அடைந்தனர். இயற்கையை அடக்கியாண்ட இரண்யாட்சன் கொல்லப்பட்டதை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்து வராக அவதாரமாகிய விஷ்ணுவைப் போற்றி வணங்கினர். அப்பொழுது வானத்திலிருந்து பூமழை சொரிந்தது. மங்கள இசைகள் முழங்கின. அப்பொழுது இப்படிப்பட்ட சம்பவங்கள் மீண்டும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என எண்ணி, ஸ்வாமியிடம், “உலக உயிர்களை எல்லாம் துன்புறுத்தி வந்த அசுரனை அழித்த உங்களிடத்தில் எங்களுடைய விண்ணப்பம். நீங்கள் இவ்விடத்திலேயே அர்ச்சா மூர்த்தியாக இருந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. அப்பொழுதுதான் மக்கள் யாவரும் கவலை இன்றி

சுகமான வாழ்க்கையை வாழ முடியும் என்றனர். பக்தர்களின் துன்பங்களைப் போக்கக் கூடியவனான இறைவன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.பிறகு, பூமி நிலையாக நிற்க வைப்பதற்கு அவ்விடத்தைச் சமன் படுத்தினார். இதைக்கண்ட தேவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். அதன் பின் தேவர்கள் அனைவரும் தம்தம் இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

வராக மூர்த்தி தன் ஆணைக்காகக் காத்திருக்கும் கருடாழ்வரைப் பார்த்தார். கருடா! ரசாதலத்தில் இருந்த இப்பூதலத்தை முன்பு இருந்த நிலைக்குக் கொண்டு வருவதற்காகவும், அசுரனை அழிப்பதற்காகவும், இந்த கோர வடிவத்தைத் தாங்கினேன். அழகே வடிவமான ஸ்ரீதேவி என்னுடைய இந்த வேஷத்தைக் கண்டு சிரிப்பாளே! எனவே ரசாதலத்திலிருந்து மேல் எழுந்து வந்த பூதேவி என்னுடைய வீர பாராக்கிரமத்தைக்கண்டு என்னை நேசித்தாள். நானும் அவளை நேசித்தேன். இருவரும் ஒருவருக்கு ஒருவர் நெருக்கமானோம். இப்படிப்பட்ட இந்த நேரத்தில் பூமா தேவியை விட்டு விட்டு வர எனக்கு மனமில்லை.

பறவைகளின் தலைவனே! மனதில் எதையும் மறைக்காமல் சொல்கிறேன். பளபளப்பாகவும், ஒய்யாரமாகவும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக விளங்கும் கனகலட்சுமி, என்னுடைய இந்த முரட்டு சரீரத்தையும் உடலெங்கும் வெறுக்கத்தக்க விதமாக குத்திட்டு நிற்கும் முடிகளையும் பார்ப்பவர்கள் யாவரும் அஞ்சுகின்ற விகாரமான கோரைப் பற்களோடும் இருக்கின்ற என்னைப் பார்த்தால் அவள் அஞ்சுவாள்! இந்த வெறுக்கத்தக்க வடிவத்தோடு வைகுண்டத்திற்கு நான் எப்படி வருவேன். இந்தக் கோரமான வடிவத்தைப் பார்த்து நீ யார்? எனக் கேட்டுவிட்டால், நானே உன் பதி என அறிமுகப்படுத்திக் கொள்ளும் நிலை அவமானம் இல்லையா?. எனவே, இச்சூழ்நிலையில் நான் வைகுண்டம் வருவது சரியாக இருக்காது. எனவே, நான் இப்பொழுது இங்கேயே இருப்பதுதான் சரியெனப்படுகிறது என்றார்.

ஸ்வாமி! தாயாரைப் பற்றி நீங்கள் இவ்வாறு கூறுவது எனக்கு விந்தையாக உள்ளது. உலக நன்மைக்காக வேண்டி தாங்கள் வராக அவதாரத்தைத் தாங்கினீர்கள். அசுரனை அழித்து இந்த உலக உயிர்களை எல்லாம் காத்த உங்களை நினைத்து ஆதி லட்சுமி தாயார் மிகவும் பூரிப்படைவாள். ஆனால், வேறு விதமாக நீங்கள் ஊகித்துக் கொள்வது எனக்கு வியப்பை உண்டாக்குகிறது. இல்லாததையும் பொல்லாததையும் எல்லாம் ஊகித்துக் கொள்வது எதனாலோ? நான் சொல்வது அதிக பிரசங்கித்தனமாக இருந்தால் என்னை மன்னிக்கவும் என்றான் கருடன்.

“ஸ்வாமி, தாயார் ஒருபொழுதும் உங்களை விட்டுப் பிரியாது, உங்கள் மார்பிலேயே வாசம் இருப்பவள் அல்லவா? அவள் தங்களுடைய இந்த உருவத்தைக் கண்டு அஞ்சுவாள் என எண்ணத் தோன்றவில்லை. நீங்கள் அனைத்தும் அறிந்தவர். உமக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அப்படியே செய்யுங்கள்” என்று கூறி வணங்கி நின்றான். புண்ணியாத்மா! எது எப்படி இருந்தாலும் நான் இந்தக் கோலத்தோடு வைகுண்டத்திற்கு வரமுடியாது. சிறிது காலம் பூதல வாசம் செய்ய வேண்டும் போல் உள்ளது. இரண்யாட்சன் அழிந்ததோடு, தீயவர்கள் அழிந்து விட்டதாகி விடாது. இன்னும் பல அசுரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களையும் அழிக்க வேண்டியுள்ளது. சரி, நீ வைகுண்டத்திற்குச் செல்வாயாக அப்படியே இங்கு நடந்தவைகள் அனைத்தையும் ஆதி லட்சுமியிடம் கூறுவாயாக. அப்படியே சொல்வதற்கு ஒன்றை மறந்து விட்டேன். எனக்குக் கிரீடாசலத்தில் சுற்றித்திரிய வேண்டும் போல் உள்ளது. எனவே, வைகுண்டத்தில் இருந்து கிரீடாசலத்தை பூதலத்திற்குக் கொண்டுவா என்று கூறியவுடனே கருடாழ்வார் தன் இறக்கைகளை விரித்து பறந்து வைகுண்டம் சென்றான்.

கருடாழ்வான் காற்று வேகத்தில் வைகுண்டம் நோக்கிச் செல்ல, ஹரி இங்கு தான் எங்கிருப்பது என்பதைப் பற்றி சிந்தித்தார். கௌதமி நதிக்குத் தெற்கு திசையில் 60 யோசனை தூரத்திலும், கிழக்கு கடற்கறைக்கு மேற்கே ஐந்து யோசனை தூரத்திலும், சுவர்ணமுகி நதிக்கு வடக்கே உள்ள பிரதேசம்தான் தான் இருப்பதற்கு சிறந்தது என நினைத்து அங்கேயே இருந்து கொண்டு கருடாழ்வான் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டி ருந்தார்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

தொடரும்....



# மதுரகவியாழ்வாரும் – அனந்தாழ்வானும்

–டாக்டர் கலியன் சம்பத்து, சென்னை, 7401076411

**மதுரகவியாழ்வாரின் ஆசாரிய பக்தி**

பாண்டிய நாட்டில் திருக்கோளூரில், சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில், மதுரகவியாழ்வார் தோன்றினார். இவர் காலம் 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். சூரியன் உதிப்பதற்கு முன் தோன்றும் அருணோதயம் போல நம்மாழ்வார் ஆகிய சூரியன் தோன்றுவதற்கு முன்னர் இவர் தோன்றினார். வேதசாஸ்திரங்கள் நன்கு கற்று, செவிக்கினிய செஞ்சொற்களாலே கவிதை பாடும் திறன் பெற்றிருந்ததால், "மதுரகவி" என்று புகழப்பட்டார்.

முக்தியளிக்கும் நகரங்களான அயோத்தி, மதுரா, காசி முதலிய வடநாட்டுத் திருப்பதிகளைச் சேவித்து வருகையில், திருக்கோளூர்ப் பெருமாளைத் திசைநோக்கித் தொழுவதற்காகத் தெற்கு நோக்கி, கண் செலுத்தியபோது, ஒரு பேரொளி இவர் கண்ணிற்குப் புலப்பட்டது. இவ்வொளி இயற்கையானது அன்று, அதற்கும் மேலான தெய்வ ஒளி என்று கருதி, அவ்வொளியை நோக்கிப் பயணம் செய்தார். குருகூர் வந்தடைந்தபோது அவ்வொளி காணாமல் போனது. இவர் மேலும் ஆராய்ந்தவுடன், அங்குள்ள திருப்புளியாழ்வார் (புளியமரம்) அடியிலே, பத்மாசனம் இட்டு அமர்ந்திருந்த நம்மாழ்வாரைக் கண்டு, "இவரே இச்சோதிவரு" என்று உறுதி செய்து கொண்டார். எந்தவொரு அசைவும் இல்லாத அவர்முன் ஒரு சிறு கல்லை எடுத்துப்போட்டார். அவ்வொலி கேட்டு, நம்மாழ்வார் கண் விழித்துப் பார்த்தார். அவருக்குப் பேச்சு வருமோ என்று அறிவதற்காக, "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று வினவ, அதற்கு நம்மாழ்வார், "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்றார். இதைக் கேட்ட மதுரகவி அவர்கள் "இவர் எல்லாம் அறிந்த ஞானி" என உணர்ந்து, அவரைத் தன் ஆசாரியனாய்க் கொண்டு, அவரைச் சேவித்து, அவரையே எல்லாமாகக் கருதித் தொண்டு செய்து வந்தார்.

நம்மாழ்வார் நான்கு பிரபந்தங்கள் அருளிச் செய்து, அவற்றின் பொருளையும் மதுரகவிக்கு உபதேசித்தார். மதுரகவியும், நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களையும் பட்டோலை செய்தார். நம்மாழ்வாரிடம் மிக்க ஈடுபாடு கொண்டும், அவரே தன் தலைவன் என்று கருதிய மதுரகவி, நம்மாழ்வார் விஷயமாக, "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பிரபந்தம் அருளிச் செய்தார். ஆசாரியரின் பிரபந்தங்களையும், தம் பிரபந்தத்தையும் பண் இசையோடு பாடிக் கொண்டும், அவற்றின் பொருளையும்




## தற்பொழுது விற்பனையில்
## தி.தி.தே. தமிழ் பஞ்சாங்கம்

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் வெளியிடப்படுகிறது. இந்த புத்தாண்டின் – ஸ்ரீசோபகிருது வருட (2023–2024) பஞ்சாங்கம் தற்பொழுது விற்பனையில் உள்ளது. இப்பஞ்சாங்கத்தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த விஷயங்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய விஷயங்களுடன் உங்கள் முன்...




**தகவல்களுக்கு : சிறப்பு அலுவலர், தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம், தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை, திருப்பதி–517 501. தொ.எண்.0877–2264209**


மக்களுக்கு உபதேசித்தும் வந்தார். ஆசாரியன் திருநாடு அலங்கரித்ததும், அவர் பிரிவு ஆற்றாது, நம்மாழ்வாரின் அர்ச்சாவிக்ரஹம் செய்து, திருக் குருகூரில் நித்ய பூஜையும், மற்ற உத்ஸவங் களையும் சிறப்பாகச் செய்து வந்தார்.

நம்மாழ்வாரின் பல விருதுகளைக் கூறி அவர் புகழ் வளர்த்த சமயம், அக்காலச் சங்கப் புலவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மதுரகவியும், “கண்ணன் கழ லிணை” என்ற பாசுரம் எழுதி, சங்கப்பலகையில் வைத்து, அதில் வெற்றியும் பெற்றார். ஸ்ரீமந் நாராயணனே, நம்மாழ்வாராக அவதரித்தார் என்று உறுதி பூண்டு, “நம்புவார் பதி வைகுந்தம் காண் மினே!” என்று தாம் அருளியபடி (கண்ணிநுண் சிறுத் தாம்பு–11), பரமபதத்திலும் நம்மாழ்வாருக்குத் தொண்டு செய்யக் கருதி, திருநாடு எழுந்தருளினார்.

### அனந்தாழ்வானின் ஆசாரிய பக்தி

இவர் மைசூர் பகுதியில், காவேரி நதிக்கரை யில் உள்ள சிறுபுத்தூரில் 1053 ஆம் ஆண்டு தோன்றியவர். இவரை ஆதிசேடன் அவதாரம் என்றும், சத்துருக்கன் அம்சம் என்றும் கூறுவர். இவர் தந்தையார் ஸ்ரீகேசவாச்சார்யார். இவர், ஸ்ரீரங்கம் சென்று, சில காலம் வசித்தபோது, பகவத் இராமாநுஜரின் காலக்ஷேபத்தில் கலந்து கொண் டார். ஒரு நாள், பகவத் இராமாநுஜர், திருவாய் மொழி கால க்ஷேபத்தில், “ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி” (திருவாய் மொழி 3–3–1) என்ற பாசுரத்திற்கு விளக்கம் கூறி, பின்னர், “சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து” என்ற பாசுர அடியை (திருவாய் மொழி 3–3–2) விளக்கும் சமயம், அந்தக் கோஷ்டியில் எழுந்த ருளியிருந்த நூற்றுக்கணக்கான சீடர்களைப் பார்த்து, “ஆழ்வார் மிக வும் விரும்பிய, புஷ்ப மண்டபமான திருமலையில் நிரந்தரமாக வசித்து, “சிந்துபூ மகிழும் திருவேங்கடவனுக்கு மலர்கள் பறித்து, மாலை தொடுத்து, தொண்டு செய்வார் உண்டோ?” என்று கேட்டார். அனந்தாழ்வான் எழுந்து, “அடியேனுக்கு நியமித் தருள வேண்டும்” என்றார். இதைக் கேட்டு உகந்த இராமாநுஜர், “நீர் ஒருவரே ஆண்பிள்ளை” என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் தழுவியருளி விடை கொடுத்து அனுப்பினார். அன்று முதல் அவர் அனந்தான்பிள்ளை என்று புகழப் பெற்றார்.



திருமலைக்கு வந்த இவர் ஓர் ஏரியை வெட்டினார்.

அருகில் பெரிய நந்தவனம் உண்டாக்கி, அதிலிருந்த மலர்களைப் பறித்து, மாலைகள் தொடுத்து, திருவேங்கடவனுக்குச் சார்த்தி தொண்டு செய்து வந்தார்.

இன்றும் திருமலையில் அனந்தாழ்வான் கட்டியுள்ள ஏரி இவரின் தொண்டினை பறைச்சாற்று கின்றன. அனந்தாழ்வான், தாம் உண்டாக்கிய நந்தவனத்தில் மலர்களைப் பறித்து, மாலைகளாகத் தொடுத்து, திருவேங்கடவனுக்குத் தொண்டு செய்து வரும் நாளில், ஒரு நாள் மலர் பறிக்கையில் நல்ல பாம்பு ஒன்று, இவர் கையில் தீண்டியது. அனந்தாழ்வான், பதற்றம் அடையாமல், பரிகாரம் தேடாமல், மீண்டும் நீராடி, மீண்டும் மலர் பறித்து, மாலை கட்டி, திருவேங்கடவன் சன்னதிக்கு வந்தார். பெருமாள், அர்ச்சகர் மீது ஆவேசித்து, "பாம்பு கடித்தும் பரிகாரம் (வைத்தியம்) செய்யாது இருந்தது ஏன்?" என்று வினவ, இவரும் "கடியுண்ட இப்பாம்பு (நான்) வலிதாகில், திருக்கோனேரியில் குளித்து திருவேங்கடமுடையானைச் சேவிக்கின் றேன். கடித்த அப்பாம்பு வலிதாகில் (வலிமை உடையது என்றால்) விரஜா நதியில் தீர்த்தமாடி, வைகுண்டநாதனைச் சேவிப்பேன் என்றிருந்தேன்" என்று பதில் கூறினார். உண்மையான வைணவர் களுக்குத் தம் தொண்டுதான் (அடிமை செய்தல்) இன்றிய மையாதது என்றும், உயிர் பயம் தேவை இல்லை என் றும் இதனால் உணர்த்தினார்.

ஒரு சமயம் திருமலைக்கு மலையேறி வந்து இராமாநுஜர், அனந்தாழ்வான் தோட்டத்தை ஆச்சரியமாகப் பார்த்தார். அதற்கு, "இராமாநுஜர் நந்தவனம்" என்றும், அனந்தாழ்வான் வெட்டிய ஏரிக்கு "இராமாநுஜர் திருவீதி" என்றும் பெயர்கள் இருப்பதைக் கண்டு, தன் அனந்தாழ்வானின் வேண்டு கோளுக்கு இணங்கி, பாஷ்யக்காரர் (இராமாநுஜர்) தன் விக்ரகத்தைத் தாமே ஆலிங்கனம் செய்து அருளினார். இந்த விக்ரகம்தான் இன்றும் திருமலை ஆலயத்தில் உண்டியலுக்கு எதிரே உள்ள ஸ்ரீராமாநுஜர் சன்னதி ஆகும்.

## மதுரகவியாழ்வார்-அனந்தாழ்வான் சில ஒற்றுமைகள்



- "ஆசார்ய தேவோ பவ" என்ற முதுமொழிக்கு ஏற்ப, இருவரும் வாழ்ந்தவர்கள். மதுரகவியாழ்வாருக்கு நம்மாழ்வாரே எல்லாமும் ஆவார். அனந்தாழ்வானுக்கு, ஸ்ரீஇராமாநுஜரே எல்லாமும் ஆவார்.
- இவர்கள் இருவரும் சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் தோன்றியவர்கள்.
- இருவரும் குருவின் கட்டளையைத் தலைமேற்கொண்டு வாழ்ந்தனர்.
- நம்மாழ்வாரின் தொண்டராக இருந்ததாலும் அவரின் ஆசியாலும், மதுர கவிகள், ஆழ்வார்கள் பன்னிருவர்களில் ஒருவர் ஆனார். ஸ்ரீராமாநுஜரின் விருப்பத்தைக் கட்டளையாக ஏற்றுத் திருமலையில் தொண்டுகள் செய்த அனந்தாழ்வான் அவரின் 74 சிம்மாசனாதிபதிகளுள் ஒருவராக ஆனார்.
- மதுரகவியாழ்வாரை "வைணவ சமயம் வாழப் பிறந்த வள்ளல்" என்று பெரியோர் கூறுவர். அதே போல, அனந்தாழ்வானை, "திருமலையைப் பிரகாசிக்கச் செய்த வள்ளல்" என்று கூறலாம்.



17–03–2023 அன்று சென்னை ஜி.என். செட்டி சாலையில்
புதியதாகக் கட்டப்பட்ட ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலய
கும்பாபிஷேகத் திருவிழா திருக்காட்சிகள்.
இந்நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்ரீஸ்ரீவிசாக சாரதா பீடாதிபதி,
தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர், தி.தி.தே.
இணைச்செயலாட்சித் தலைவர் மற்றும்
உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்





















## திருப்பதி
## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்
**2023 மே 26 முதல் ஜீன் 03 வரை**

**26-05-2023 வெள்ளிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**27-05-2023 சனிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**28-05-2023 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**29-05-2023 திங்கட்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**30-05-2023 செவ்வாய்க்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**31-05-2023 புதன்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**01-06-2023 வியாழக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**02-06-2023 வெள்ளிக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**03-06-2023 சனிக்கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



## நாகுலாபுரம்
## ஸ்ரீவேதவல்லி சமேத
## ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்
**2023 மே 04 முதல் 12 வரை**

**04-05-2023, வியாழக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**05-05-2023, வெள்ளிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**06-05-2023, சனிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**07-05-2023, ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**08-05-2023, திங்கட்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட சேவை

**09-05-2023, செவ்வாய்க்கிழமை**
பகல் : ஹனுமத் வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**10-05-2023, புதன் கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**11-05-2023, வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**12-05-2023, வெள்ளிக்கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



## கார்வேடி நகரம்
## ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்
**2023 மே 13 முதல் 21 வரை**

**13-05-2023, சனிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**14-05-2023, ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**15-05-2023, திங்கட்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**16-05-2023, செவ்வாய்க்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**17-05-2023, புதன்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**18-05-2023, வியாழக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**19-05-2023, வெள்ளிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**20-05-2023, சனிக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**21-05-2023, ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்




## அப்பளாயகுண்ட்டா
## ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி, ரிகூஷிகேஷ் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி, நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்

**2023 மே 31 முதல் ஜூன் 08 வரை**

**31-05-2023, புதன்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**01-06-2023, வியாழக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**02-06-2023, வெள்ளிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**03-06-2023, சனிக்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**04-06-2023, ஞாயிற்றுக்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**05-06-2023, திங்கட்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**06-06-2023, செவ்வாய்க்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**07-06-2023, புதன்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**08-06-2023, வியாழக்கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்




03–03–2023 முதல் 07–03–2023 வரை நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவத் திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள் மற்றும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர்.




30–03–2023 அன்று திருமலை ஆலயத்தில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ஸ்ரீசீதாராம லட்சுமணருக்கு நடைபெற்ற ஸ்நபன திருமஞ்சனம் மற்றும் அன்று இரவு அனுமத் வாகனத்தில் ஸ்வாமி எழுந்தருளிய திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். தம்பதியினர்



31–03–2023 அன்று திருப்பதி எஸ்.வி. வேத பல்கலைக்கழகத்தில் உலக நன்மைக்காக நடைபெற்ற சுதர்சன, நவகிரக ஹோம நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர்



04–03–2023 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க வருகை தந்த விசாக சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் உத்தர அதிகாரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாத்மானந்தேந்திர சுவாமிகளை வரவேற்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர்




08–03–2023 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஸ்ரீமாதா ரம்யானந்த பாரதி ஸ்வாமிகள், தி.தி.தே. இணைச் செயலாட்சித்தலைவர் (எச்.இ)திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்

# இளம் கோயிலும் உளம் கோயிலும்

மலையப்ப ஸ்வாமிக்கு ஒரு விசேஷமான குணம் உண்டு. அவர் ஏன் வைகுந்தத்தை விட்டு திருமலைக்கு எழுந்தருளினார் என்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஒரு அடியவனுக்காக என்பதை மறந்து விடக்கூடாது.

*''மச் சித்தா; மத் கத ப்ராணா:''* என்று கீதையில் சொன்னபடி தனக்கு பிராணன் போன்ற ஒரு அடியவன் கிடைக்க மாட்டானா என்று தேடுவதற்காகத்தான் அவன்திருமலையில் வந்து எழுந்தருளி இருக்கிறான்.

அர்ச்சாவதாரத்தின் நோக்கம் கூட அதுதானே.

*''எல்லாம் எனக்கு கண்ணனே''* என்று நினைக்கக் கூடிய ஒரு உத்தமன் கிடைத்து விட்டால், அவனுடைய உள்ளம் தனக்கு ஏற்ற இடமாக இருக்கும் என்று எம்பெருமான் நம்புகின்றான். காத்திருக்கிறான். அதனால் தான் திருமழிசையாழ்வார்.

*''காணல் உறுகின்றேன் கல்லருவி முத்துதிர*
*ஓண விழவில் ஒலி அதிர-பேணி*
*வரு வேங்கடவா! என்னுள்ளம் புகுந்தாய்*
*திருவேங்கடம் அதனைச் சென்று''*

"நான் ஓணப் பெருவிழாவைக் காணுவதற்காகத் திருமலைக்குச் சென்றேன். ஆனால் அந்தத் திருமலை அப்பன் என்னுடைய உள்ளத்திலே வந்து நின்று விட்டான்" என்று பாடுகிறார். *''வேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்''* என்ற வரியின் நயம் பாருங்கள்.

நம்மாழ்வாரும், "நான் எந்தத் தகுதியும் இல்லாதவன். ஆனால் அந்தத் தகுதி இன்மையையே தகுதியாகக் கொண்டு, என் மீது பாசம் வைத்த பரஞ்சுடர் ஜோதியவன்" என்று பாடுகின்றார்.

*''ஈசன் வானவர்க்கு என்பன் என்றால் அது*
*தேசமோ திருவேங்கடத்தானுக்கு*
*நீச னேன்நிறைவு ஒன்றுமி லேன்என் கண்*
*பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே''*

அதைப்போலவே திருமங்கை ஆழ்வாரும்,

*''வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்!*
*நந்தாத கொழுஞ் சுடரே! எங்கள் நம்பீ!*
*சிந்தாமணியே! திருவேங்கடம் மேய*
*எந்தாய்! இனி யான் உன்னை என்றும் விடேனே''*

என்று பாடுகின்றார். இப்படி அடியார்கள் உள்ளத்தில் உறைவதையே ஒரு நோக்கமாகக் கொண்டவன் திருவேங்கடவன் என்பதை விளக்கும் மற்றொரு பாசுரம் இது.



– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.

பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதியின் 54ஆம் பாசுரம்.

*“வெற்பு என்று இருஞ்சோலை வேங்கடம் என்று இவ்விரண்டும்,*
*நிற்பென்று நீ மதிக்கும் நீர்மைபோல் - நிற்பென்று*
*உளங்கோயில் உள்ளம் வைத்து உள்ளினேன்*
*வெள்ளத்து இளம் கோயில் கைவிடேல் என்று.”*

இதிலே முதல் செய்தி எம்பெருமான் எதற்காக அர்ச்சாவதாரத்தை எடுத்துக் கொண்டு வந்திருக் கிறான் என்பது. எம்பெருமான் ஐந்து நிலைகளிலே காட்சி தருகின்றான்.

*“விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடல் சேர்ப்பாய்!*
*மண்மீதுழல்வாய்! இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்!*
*எண்மீதியன்ற புறவண்டத்தாய்! என தாவி*
*உண்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ?*

ஒன்று வைகுந்தத்தில் இருக்கும் இருப்பு, இது நித்தியமானது. எல்லா உயிர்களுக்கும் நோக்கமானது. “த்ரிபாத் விபூதி” என்று இதனைச் சொல்லுகின்றார்கள். மோட்சம் என்று சொல்லுகின்றார்கள். பேரின்ப பெருவாழ்வு என்று சொல்லுகின்றார்கள். இங்கே ஸதா பச்யந்தி என்று இமைக்காத கண் கொண்டவர்களாய் நித்திய சூரிகளாய் உள்ளவர்கள் தொண்டு செய்ய, கருட விஷ்வக்சேனர்களோடு எம்பெருமான் காட்சி தருகின்றான்.

இதனை ஆழ்வாரே *“திருமகளும் மண்மகளும் இருபாலும் திகழ நலம் அந்தமில் நாடு”* என்கிறார். பாட்டு கேட்கும் நிலை இது.

இதற்கு அடுத்த நிலை வியூகம் எனச் சொல்லப்படும் பாற்கடலில் ஆதிசேஷ சயனத்தில் பள்ளி கொண்ட நிலை. இந்த நிலையை உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமாள் என்று சொல்வர். தேவர்கள் தங்கள் மனக்குறையை எம்பெருமானிடம் விண்ணப்பிப்பதற்காக சதா வந்து, பாற்கடல் கரையிலே நின்று அவனிடத்திலே கோரிக்கை வைப்பதால், இதற்கு கூப்பாடு கேட்கும் இடம் என்று சொல்லுகின்றார்கள். இது சகல அவதார நிலைகளுக்கும் விதை போன்ற இடம். மூன்றாவதாக அவன் ராமகிருஷ்ண அவதாரங்களை எடுத்து வந்த விபவ நிலை.


இதற்கு அடுத்த நிலை தான் அர்ச்சாவதாரம். இப்படி அவன் விபவ நிலையை எடுத்தான் என்பதற்கு

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*இத$_3$ம் கிமித்யுக்தவதேத$_2$ தஸ்மை கப்யாஸவாக்யஸ்ய*
*யத$_2$ார்த்த$_2$முக்த்வா ।*
*ஜைமிந்யுபாக்$_2$யாநமபி ப்$_3$ருவந்தம் ராமாநுஜம் நாத்ர*
*படே$_2$த்யவோசத் ॥*
(22)

**“கண்ணீர் வருவது எதனாலே?” என்று கேட்ட யாதவருக்கு, “ஸூர்யனால் மலர்ந்த (அல்லது பருத்த தண்டை உடைய, அல்லது ஆழமான நீரில் முளைத்த) தாமரை போன்ற கண்ணையுடையவன் பரமபுருஷன்” என்ற அழகான பொருளிருக்க, குரங்கின் ஆஸநவாயாகிற நிஹீந (தாழ்ந்த) த்ருஷ்டாந்தம் சொன்னதாலே**



**வருந்திக் கண்ணீர் விட்டேன்” என்று சொல்லி, ஜைமிந்யுபாக்யானத்தையும் கூறிய இராமாநுஜரை, “நீ இனி இங்கே படிக்க வேண்டாம்” என்று உரைத்தார் யாதவர்.**

– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

# கண்ணன் கருத்துரை



*யோ யோ யாம் யாம் தனும் பக்த:*
*ச்ரத்தயார்சிதுமிச்சதி ।*
*தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ*
*விததாம்யஹம் ॥* (7-21)

**எந்தெந்த பக்தன் அவனுக்கு இஷ்ட தேவதையான எந்தெந்த தெய்வ உருவை சிரத்தையுடன் வழிபட வேண்டும் என்று நினைக்கிறானோ அவனவனுக்கு அந்தந்த உருவிலேயே நிலைத்த சிரத்தையை நான் உண்டாக்குகிறேன்.**



தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.

ஒரு சாட்சியாய் விளங்கும் அர்ச்சாவதாரம் நிலையை, *"பின்னானார் வணங்கும் சோதி"* என்று திருமங்கையாழ்வார் தம்முடைய திருமடலிலே பாடுகின்றார். அசுரர்களை அழிக்க விபவ அவதாரங்களை எடுத்தான்.

சரி. அர்ச்சாவதாரம் ஏன் எடுத்தான் என்கிற கேள்வி எழுகிறது அல்லவா? இந்த அர்ச்சாவதார நிலை என்கின்ற நான்காவது நிலையிலிருந்து ஐந்தாவது நிலைக்கு எம்பெருமான் வருவதற்கு விரும்புகின்றார். அந்த விருப்பத்தை தீர்த்துக் கொள்வதற்காக அவன் அர்ச்சாவதாரம் எடுத்துள்ளான்.

கோயில்களில் இரண்டு கோயில்கள் உண்டு. 1)உளம் கோயில், 2) இளம் கோயில்.

உளம் கோயிலில் வருவதற்குத்தான் இளம் கோயில். வியூக நிலையில் அவன் சிந்திக்கின்றான். அந்த வியூக நிலையை *"மாசிப்புனர்ப்பூசம் காண்மின் இன்று"* என்று ஆழ்வார் பாசுரம் இடுகின்றார். அந்த இளம் கோயில் நிலையிலேயே இருந்து, பூலோகத்தில் உள்ள திருக்கோயிலிலே தானே விரும்பி வந்து திருக்காட்சி தருகின்றான். அப்படி அவன் மிகவும் விரும்புகின்ற திவ்ய தேசங்கள் இரண்டு.

திருமால் இருஞ்சோலை எனப்படும் தெற்குத் திருமலை. இன்னொன்று திருவேங்கடம் என்னும் வடக்குத் திருமலை. உகந்து அருளிய திவ்ய தேசங்களிலே எம்பெருமான் மிக மிகத் திருவுள்ளம் பற்றி இருக்கும் இரண்டு இடங்களை இதிலே ஆழ்வார் காட்டுகின்றார்.

*இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலையென்னும்*
*பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவைதம் மொடும் வந்து*
*இருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து இன்று அவன் வந்து*
*இருப்பிடம் என் தனிதயத்துள்ளே தனக்கின்புறவே"*

என்ற இராமாநுஜ நூற்றந்தாதிப் பாசுரமும் இதனை உணர்த்தும். இந்த பாசுரத்தில் அவர் சொல்ல வருவது,

"நீ திருவேங்கடத்திலும் திருமலையிலும் ஏன் எழுந்தருளி இருக்கிறாய் தெரியுமா? இளம் கோயிலாகிய அங்கே இருந்து உளம் கோயிலாகிய என் மனதிலே வந்து இருப்பதற்காகத்தான்"

கோயில்களிலே குடமுழுக்கு வைபவம் நடத்துவார்கள். அப்பொழுது அந்த அர்ச்சாவதார விக்கிரகத்தை பாலாலயம் செய்து வைப்பார்கள். பாலாலயம் என்பது இளங்கோயில் (பால+ ஆலயம்=பாலாலயம்)

அதற்குப்பிறகு கும்பத்தில் ஆவாஹனம் செய்து, மந்திர பூர்வமாக பிம்பத்தில் அந்த ஆவாகனத்தை மாற்றுவார்கள். மந்திர பூர்வமான அந்தப் புனித நீரால் கோயில் கோபுரங்களையும், கருவறை விமானத்தையும், பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரகங்களையும் நீராட்டுவார்கள்.

அது வரையில் கருவறைக்கு பெரிய சிறப்பு ஒன்றும் இல்லை. பாலாலயத்தில் எம்பெருமான் அதிக நாட்கள் இருக்கக் கூடாது. அந்த பாலாலயம் வைப்பதற்குக் காரணமே கருவறையில் மூலப் பிரதிஷ்டை நடக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதைப்போல எம்பெருமான் அர்ச்சாவதார வியூக நிலையில்,

இளம் கோயில் போல இருந்து கொண்டு ஒரு பக்தனுடைய உள்ளமாகிய பெருங்கோயிலுக்கு வர வேண்டும் என்று நினைக்கிறான். அப்படி வருவதற் கான முயற்சிதான் அர்ச்சாவதாரம். கடைசி சேதனன் வைகுண்ட வாழ்வு பெறும் வரை நான் இந்த திருவரங்கத்தை விட்டு நகரமாட்டேன் என்று படுகாடு கிடக்கிறான். திருவேங்கடத்திலிருந்து வந்தவன் அல்லவா அவன்!. இதை அறிந்த ஆழ்வார் இப்பொழுது சொல்லுகின்றார். “நான் உன்னை பிரபத்தி செய்கின்றேன். நீ இளம் கோயிலையும் கைவிட வேண்டாம். உளம் கோயிலையும் கைவிட வேண்டாம். காரணம். இன்னும் பலருடைய உள்ளங் களுக்கும் எம்பெருமான் போக வேண்டும் அல்லவா” பாசுரம் மறுபடி பாருங்கள். ஆழ்வாரின் உள்ளம் புரியும்.

*வெற்பு என்று இருஞ்சோலை வேங்கடம் என்று இவ்விரண்டும்,*
*நிற்பென்று நீ மதிக்கும் நீர்மைப்போல் - நிற்பென்று*
*உளங்கோயில் உள்ளம் வைத்து உள்ளினேன் வெள்ளத்து இளம் கோயில் கைவிடேல் என்று”*

இப்பாசுரத்தில் எம்பெருமானுடைய ஆசையை யும், அவருடைய நீர்மை குணத்தையும் (சௌலப்பிய விசேஷம்) ஆழ்வார் சுட்டிக் காட்டுகின்றார். ஆழ்வா ரின் உள்ளம் கிடைத்தவுடன், எம்பெருமானுக்கு திருப்பாற்கடலை (இளம் கோயில்) விட்டு விடலாம் என்று ஒரு எண்ணம் வந்தது என்று ஆழ்வார் சொல்லி, அதை கைவிட வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

*பாசுரம் அறிவோம்...*



## ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 03-05-2023 | புதன் | -- | அங்குரார்ப்பணம் |
| 04-05-2023 | வியாழன் | துவஜாரோஹணம் | பெரியசேஷ வாகனம் |
| 05-05-2023 | வெள்ளி | சிறியசேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 06-05-2023 | சனி | முத்துப் பந்தல் வாகனம் | சிம்ம வாகனம் |
| 07-05-2023 | ஞாயிறு | கல்ப விருக்ஷ வாகனம் | ஹனுமத் வாகனம் |
| 08-05-2023 | திங்கள் | மோகினி அவதாரம் | கருட சேவை |
| 09-05-2023 | செவ்வாய் | சர்வ பூபால வாகனம் | கல்யாணோத்ஸவம், யானைவாகனம் |
| 10-05-2023 | புதன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 11-05-2023 | வியாழன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 12-05-2023 | வெள்ளி | சக்ரஸ்நானம் | துவஜாவரோஹணம் |
| 13-05-2023 | சனி | ------- | புஷ்பயாகம் |



108 திவ்ய தேச வைபவம்

75

# திருக்கச்சி

# காஞ்சீபுரம் ஸத்ய வ்ரத க்ஷேத்ரம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | வரதராஜன், பேரருளாளன், தேவாதி ராஜன், அத்தியூரான், தேவப்பெருமாள். (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | பெருந்தேவித் தாயார், தனிக் கோயில் நாச்சியார், மஹா தேவி தாயார். |
| புஷ்கரணி | : | அனந்த ஸரஸ், சேஷ தீர்த்தம், வராக தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், பத்ம தீர்த்தம், அக்னி குசல தீர்த்தம், வேகவதி ஆறு. |
| தீர்த்தம் | | வேகவதி ஆறு, சாலைக் கிணறு. |
| விமாநம் | : | புண்யகோடி விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | பிருகு, நாரதர், ஆதிசேஷன், பிரம்மன், கஜேந்திரன். |
| ஆகமம் | : | பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | : | பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார். |

**விசேஷம் :**

ஆழ்வார்கள் ஆசார்யர்கள் மிகவும் உகந்த திவ்ய தேசம். ஸ்ரீநம்மாழ்வாரின் அர்ச்சைத் திருவடி வம், மற்ற திவ்ய தேசங்களில் இருப்பது போல் இல்லாமல், தனது வலத்திருக்கையைத் திருமார்பை நோக்கி வைத்துக் கொண்டுள்ளமை மிக விசேஷம்.

**த்யானச்லோகம் :**

*காஞ்ச் யாம் ஹஸ்தி கிராவபீஷ்ட வரதோ தேவீ ப்ரஹந்நாயிகா*
*தீர்த்தம் சேஷ ஸரோ விமாநமபிவை தத் புண்யகோட் யாஹ்வயம் |*
*யஜ்ஞே பங்கஜ ஸம்பவாயபுரத: பச்சாந் முகப் பாவாகாத்*
*ப்ரயக்ஷஸ் ஸகணைஸ் ஸுராஸு கணைஸ் ஸேவ்யோ பவத் ஸுரிஹபி: ||*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம் :**

*“நச்சி மெய்க்கமலன் வேதம் நவின்று செய் வேள்வி நாப்பண்*
*மைச் சுடர்க்கிரிபோல், மேனி வயங்கிட மவுலி மின்ன*
*அச்சுதப் பெயரினான் என்று அமரர்கள் போற்றி நின்ற*
*கச்சி அத்திகிரி நாதன் கழல் இணை வாழி வாழி”*

*“திங்கள் தங்கு சடையன் மேவு கச்சி வீதி திகழ*
*நல் பங்கயத்தின் அயன் வலாரி முனிவர் தேவர்*





*பணியவே கங்கை கொண்ட மண்டபத்தினில்*
*சிறந்த கலுழன் மேல்*
*மங்குலாம் எனக் குலாவு வரதராசர் வாழியே''*

*வருந்தார் அளகப்பதிக் கைத்தலவோடு மாற்றிக்*
*குருத்து ஏறிநின்று, ஆச்சியர் கூறைகள்*
*கொள்ளை கொண்டே*
*விருந்தாவனத்து எய்திய திகிரி வாய்*
*மாயன்மேவு*
*பெருந்தேவி எனும் திருப்பீதகத் தாள்கள் வாழி*
*(வரதராஜ பாகவதம் )*

*''அத்தி ஊரான் புள்ளை ஊர்வான்*
*அணிமணியின்*
*துத்தி சேர் நாகத்தின்மேல் துயில்வான் - முத்தீ*
*மறை ஆவான், மாகடல் நஞ்சுஉண்டான்*
*தனக்கும்*
*இறையாவான் எங்கள் பிரான்''*
*- பூதத்தாழ்வார்*

*''கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய*
*களிறென்றும் கடல்கிடந்த கனியே என்றும்*
*அல்லியம்பூ மலர்ப்பொய்கைப் பழன வேலி*
*அணியழுந்தூர் நின்றுகந்த அம்மான் என்றும்*
*சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல்*
*தாங்கித்*
*தூமுறுவல் நகையிறையே தோன்ற நக்கு*
*மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே*
*மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பே தையே.''*
*- திருமங்கையாழ்வார்*

*பொருளாசை மண்ஆசை பூங்குழலார் போகத்து*
*இருள் ஆசை சிந்தித்து இராதே - அருளாளன்*
*கச்சித் திருப்பதியாம் அத்தியூர் கண்ணன்தாள்*
*இச்சித்து இருப்பது யாம்''*
*– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்*

**நாமாக்கள்**

701. *ஓம் வஸு: நம:*

திருப்பாற்கடலில் வசிப்பவன்.

*ஓம் ஜகதாத்ருதி: நம:*

உலகங்களைத் தன் சரீரமாக உடையவள்.

702. *ஓம் வஸுமஹா: நம:*

வஸுதேவனிடம் தன் மனத்தைச் செலுத்தியவன்.

*ஓம் விசித்ர ஹாரிணி நம:*

பல வர்ணஹாரங்களை அணிந்தவள்.

703. *ஓம் ஹவி: நம:*

நந்தகோபனின் விருத்தினன்.

*ஓம் காந்தா: நம:*

எல்லோராலும் வேண்டப்படுபவள்.

704. *ஓம் ஸத்கதி: நம:*

நல்லோர்களுக்குப் புகலிடம்.

*ஓம் வாஹிநீ நம:*

எல்லாவற்றையும் தாங்குபவள்.

705. *ஓம் ஸத்க்ருதி: நம:*

திவ்ய சேஷ்டிதங்களைச் செய்தவன்.

*ஓம் பூதவாஸிநீ நம:*

பஞ்சபூதங்களையும் தன் இடத்தில் வைத்திருப் பவள்.

706. *ஓம் ஸத்தா நம:*

நல்லோர்களுக்கு இவன் ஒருவனே அடைக் கலம்.

*ஓம் ப்ராணிநீ நம:*

பிராணன் பிராண வாயு இவற்றால் இயங்கும் ஜீவன்களை வாழ்விப்பவள்.

707. *ஓம் ஸத்பூதி: நம:*

நல்லோர்களுக்கு எல்லா வகையிலும் உதவுபவன்.

*ஓம் ப்ராணதா: நம:*

சிற்றின்ப விஷத்தால் உயிரிழக்கும் ஜீவன்க ளுக்கு உயிர் அளிப்பவள்.

708. *ஓம் ஸத்பராயண: நம:*

நல்லோர்களையே முக்ய ஆதாரமாகக் கொண்டவன்.

*ஓம் விச்வா: நம:*

எல்லாவற்றிலும் வ்யாபித்து ஆத்மாவாய் நின்று எல்லாமாக இருப்பவள்.

709. *ஓம் ஸூரஸேந: நம:*

சூரர்களை சேனையாக உடையவன்.

*ஓம் விச்வப்ரஹ்மாண்டவாஸிநீ நம:*

எல்லா பிரம்மாண்டங்களிலும் பரந்து இருப்பவள்.

700. *ஓம் யதுஸ்ரேஷ்ட: நம:*

யதுகுலத்தில் சிறந்தவன்.

*ஓம் ஸம்பூர்ண: நம:*

எல்லா வஸ்துக்களையும் நியமித்து அவற்றில் நிறைந்து இருப்பவள்.

*ஸ்ரீமதே மஹாதேவி நாயிகா (பெருந்தேவி) ஸமேத ஸ்ரீவரதராஜ, தேவாதிராஜ (பேரருளாளன்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 90 கி.மீ. தூரத்தில், காஞ்சிபுரம் நகரத்தில் இவ்வாலயம் அமைந்து உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*

## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்

ஒவ்வொரு வருடமும் வைசாகம் (வைகாசி) மாதம் பௌர்ணமி நாள் அன்று நிறைவடையும் உற்சவமாக மூன்று நாட்கள் நடைபெறும் வருடாந்திர உத்ஸவமே வஸந்த உத்ஸவம். அபிஷேகம், நைவேத்தியம் ஆஸ் தானம், திருவீதி உலா என்று நடைபெறும் உத்ஸவத்தில் பங்கு கொள் ளும் பக்தர்களுக்கு நோய் நீங்கி ஆரோக்கியம் சித்திக்கும்.



02-05-2023, செவ்வாய்க் கிழமை அன்று அங்கு ரார்ப்பணம் நடைபெறும். 03-05-2023, புதன் கிழமை வஸந்தோத்ஸவம் ஆரம்பமாகி, 04-05-2023, வியாழன் அன்று தங்கத்திருத்தேரில் பத்மாவதி தாயார் பவனி வந்து, 05-05-2023, வெள்ளிக்கிழமை வைசாக மாத பௌர்ணமி அன்று வஸந்தோத்ஸவம் இனிதே நிறைவடையும்.

# ஆதிசங்கர பகவத் பாதாள்

-திருமதி மைதிலி சம்பத்,
செகந்திராபாத்,
81256 16876.

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஒரு நாள் சங்கரருடைய சீடர் சனந்தர் ஆற்றின் மறு கரையில் துணி துவைத்துக் காய வைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சங்கரர் உரத்த குரலில் "சனந்தா, உலர்ந்த துணிகளைக்கொண்டு வா" என்று கூப்பிட்டார். குருவின் குரலைக் கேட்ட சனந்தர் நதியைக் கடக்கப் படகு வேண்டும் என்றெல்லாம் யோசிக்காமல் நதியின் மேல் நடந்து குரு இருக்கும் இடத்திற்கு புறப்பட்டார். அவர் ஒவ்வொரு அடியை எடுத்து கங்கையின் மேல் வைக்கும் பொழுதும், அந்த ஒவ்வொரு அடிக்கும் அடியிலும் ஒரு தாமரை மலரை மலரச் செய்தார் சங்கரர். அந்தத் தாமரை மலர்களின் உதவியால் மறுகரை வந்து அடைந்தார். எனவே, அனைவரும் சனந்தரின் மேன்மையை அறிந்தனர். அவருக்கு சங்கரர் "பத்மபாதர்" என்ற பெயர் சூட்டினார்.

ஒரு நாள் ஒரு வயதானவர் வந்து பிரம்ம சூத்திரத்திற்கு எதிரான கருத்துகளை எடுத்து வைக்கவும், சங்கரர் தெளிவான பதில்களால் அவரோடு வாதாடினார். அவர் சளைக்காமல் தொடர்ந்து விவாதித்ததால் விவாதம் பல நாட்கள் நடந்து கொண்டிருக்கவே, தன்னுடைய பக்தியால் வந்தவர் பிரம்ம சூத்திரம் எழுதிய வியாசரே என்று அறிந்து கொண்ட சங்கரர் தன் செய்கைக்கு மனம் வருந்தினார். வியாசரிடம் ஆசி வேண்டினார். "உன் பெருமையை உலகுக்கு உணர்த்தவே உன்னுடன் விவாதிக்க வந்தேன். உன்னுடைய ஆயுள் 16 வயது தான். நான் உனக்கு இன்னும் ஒரு பதினாறு ஆண்டுகளைத் தருகிறேன். நீ எழுதிய பிரம்மசூத்திர பாஷ்யத்தை உலகம் முழுவதும் பரப்பு" என்று கூறி மறைந்தார். சரஸ்வதியின் அவதாரமாகிய சரசவாணி சத்தியலோகம் செல்ல விரும்பினாள். அப்பொழுது சங்கரர் வன துர்கா மந்திரத்தை ஓதி அவள் சத்தியலோகம் செல்வதைத் தடுத்து, "நீங்கள் பூமியிலேயே இருக்க வேண்டும்" என்று வேண்ட, தேவியும் சம்மதித்தாள்.

ஸ்ரீசைலத்தில் ஒரு காபாலிகன் "அறிவில் சிறந்த ஒரு ஞானியின் தலையை வெட்டி அக்னிக்கு சமர்ப்பித்தால், பூத உடலுடன் கைலாயம் செல்ல வேண்டும் என்ற என்னுடைய விருப்பம் நிறைவேறும். என்னுடைய எண்ணம் நிறைவேற தாங்கள் தங்களுடைய தலையைத் தந்து உதவ வேண்டும்" என்று சங்கரரைக் கேட்டான். சம்மதித்த சங்கரரும் நள்ளிரவில் பைரவர் கோயிலுக்கு தனியாகச் செல்ல ஆரம்பித்தார். ஏதோ பிரச்சனை என்பதை அறிந்து பின்னாலேயே போன பத்மபாதர், அங்கு சென்று தன் தலையை வளைத்து அந்த காபாலிகன் தன்னை வெட்ட ஏதுவாக உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருந்த சங்கரரைக் காப்பாற்ற பத்ம பாதர் நரசிம்ம மந்திரத்தை ஓதினார். உடனே தானே நரசிம்மமாகி அந்த காபாலிகன் மேல் பாய்ந்து அவனைக் கொன்றார்.



கொல்லூர் சென்று சில காலம் தங்கி இருந்த பொழுது தன் இறந்த புதல்வனின் சடலத்தை மடியில் வைத்து ஒரு தம்பதிகள் வருந்தி அழுது கொண்டிருந்தனர். சங்கரர் மனம் உருகி அவர்களின் துயர் தீர கடவுளை வேண்டவும், அந்த சிறுவன் உயிர் பிழைத்தான். அங்கு

இருந்தபோது சங்கரர் கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்டார். அப்போது மூகாம்பிகை கஷாயம் தயாரித்துக் கொடுத்து சங்கரரின் காய்ச்சலை குணப்படுத்தினார். அந்தச் சம்பவத்தை நினைவு கூறும் விதமாக இன்றும் மூகாம்பிகைக்கு இரவு நெய்வேத்தியத்துடன் கஷாயமும் படைக்கப் படுகிறது.

சங்கரர் கர்நாடகாவில் பயணம் செய்து கொண்டிருந்த போது ஸ்ரீவாடியில் ஒரு அந்தணர் தன்னுடைய மூளை வளர்ச்சி இல்லாத, வாய் பேச முடியாத மகனுடன் சங்கரரிடம் வந்தார். அவரை வணங்கி தன் மகனை குணப்படுத்த வேண்டும் என்று வேண்டியதும், சிறுவனை உற்று நோக்கிய சங்கரர் அவனிடம், "நீ யார்? ஏன் இப்படி ஜடம் போல் இருக்கிறாய்?" என்று கேட்டார். சங்கரர் கேட்டவுடன் அதுவரை ஊமையாக இருந்த சிறுவன் ஆச்சரியம் தரும் விதமாக பேசத் தொடங்கி, "நான் ஜட மில்லை" என்று சொல்லி ஆத்ம தத்துவத்தை விளக்கும் விதமாக 12 சுலோகங்கள் இதோ என்று இயற்றினார். இவை ஹஸ்தாமலகீயம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு சங்கரரே பாஷ்யம் இயற்றியுள்ளார்.

பிறகு அவனுக்கு "ஹஸ்தாமலகன்" என்று பெயர் சூட்டி தன் சீடனாக ஏற்றார். மற்ற சீடர்கள் "அவனுக்கு கல்வி கற்காமலேயே இத்தனை ஞானம் எப்படி வந்தது?" என்று கேட்டனர். உடனே சங்கரர் "ஒரு முனிவர் யமுனா நதிக் கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பெண்மணி தன்னுடைய இரண்டு வயது சிறுவனை அவரிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு குளிக்கச் சென்றாள். ஆனால் அந்தக் குழந்தை நதியில் விழுந்து இறந்து விட்டது. மக்கள் அந்தக் குழந்தையின் உடலை முனிவரிடம் கிடத்தி அழுதனர். இதைப் பார்த்து வருந்திய முனிவர் தன் யோக சக்தியால் குழந்தையின் உடலில் புகுந்து அவனுக்கு உயிர் கொடுத்தார். ஹஸ்தாமலகராக இன்று இருக்கிறார்" என்று கூறினார்.

துங்கா நதி தீரத்தில் முன்பு பாம்பு தவளைக்கு நிழல் கொடுத்த இடத்தில் ஒரு ஆலயம் அமைத்து, அதில் சரசவாணி என்ற பெயரில் சரஸ்வதியை பிரதிஷ்டை செய்தார். சங்கரனுக்கு கிரி என்று ஒரு மாணவன் இருந்தான். அவன் பாடல்களில் சற்றுப் பின்தங்கி இருக்கவே மற்ற சீடர்கள் அவனைப் பார்த்து கேலி செய்தனர். எனவே அவர்களுக்கு பாடம் புகட்ட விரும்பிய சங்கராச்சாரியார் ஒரு நாள் அவன் சற்று தாமதமாக வகுப்பிற்கு வரவும் அன்றே அவனுக்கு மிகுந்த ஞானத்தை மானசிகமாகவே புகட்டினார். உடனே அவன் 8 சுலோகங்கள் கொண்ட தோடகாஷ்டகம் இயற்றினான். தோடகாச்சாரியார் என்ற பெயரும் அவனுக்கு உண்டாயிற்று. ஆரியாம்பாள் தன்னை சிவ லோகம் அனுப்பச் சொன்னார். சிவகணங்கள் பார்த்து பயந்த தன் தாயை பார்த்து விஷ்ணுவைத் துதிக்க, விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றனர். தன் தாயிற்கு சொன்ன வாக்கிற்கு ஏற்ப சுலோகங்களை இயற்றினார். அவருடைய தாய் மாமன் பத்மபாதர் எழுதிய நூலை எரித்துவிட சங்கரர் எழுத, தீயில் கருகிய நூல் மீட்டுக் கொடுக்கப்பட்டது. அதுவே பஞ்சபாதிகள் என்ற நூல். காஷ்மீரில் உள்ள தேவயானி ஆலயத்தில் சர்வக்ஞ பீடத்தில் ஞானிகளை எல்லாம் வென்று தென்திசை பீடத்தில் அமர்ந்தார். பாரதத்தின் நான்கு திசையிலும் நான்கு மடங்களை நிறுவி, சீடர்களுக்கு தலைமைப் பொறுப்பை வழங்கி, சிவனுடைய வாகனமான காளை மேல் ஏறி கைலாயம் சென்று விட்டார். 32 வயதிற்குள் நிறைய உபநிஷத், பாஷ்யம் எழுதி, சுலோகங்கள் எழுப்பிய ஸ்ரீஆதிசங்கரரின் புகழ் சந்திர, சூரியர் உள்ளவரை நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

முற்றும்....


திருமலை திருப்பதி தேவஸ்தானம்



**திருமலையில் இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு நாம் அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

இரத்தம் தானம் செய்யுங்கள்! ஆபத்தில் உள்ளோரைக் காத்திடுங்கள்!!

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

(எம்பெருமான் எதிராசற்கு ஈடு உரைத்தான்) பெருமான் – பெருமை என்பதில் மை விகுதி கெட்டு பெருமான் ஆயிற்று. பெருமையில் சிறந்தவர். எம்பெருமான் என்று நமக்கு பெருமையில் சிறந்தவர் என்றபடி. எதிராஜர் – இராமாநுசருக்குத் தேவப் பெருமாள் இட்ட பெயர். இராமாநுசர் காஞ்சியில் திருஅனந்த ஸரஸ்ஸு தீரத்தில் பேரருளாளர் ஸந்நிதி யிலே நான்காவது ஆச்ரம ஸ்வீகாரம் (ஸந்யாஸாச்ரமம்) பண்ணி அருளினார். அப்போது இவருக்கு தேவப்பெருமாள் எதிராஜர் என்னும் திருநாமம் சாத்தி அருளினார் என்று பெரிய திருமுடி அடைவு கூறும். இது பதினோறு திருநாமங்களில் ஒன்றாகும். திருக்கோட்டியூர் நம்பி நியமனத்தால் ஈடு என்று பிரசித்தி பெற்ற திருவாய்மொழிப் பொருளைக் காலக்ஷேபமாக அருளினவர் திருமாலை ஆண்டானாவர். “ஸ்ரீபாஷ்யகாரார்த்த ஹிதோப தேசம்” என்று அவர் தனியனில் அருளியபடியே ஸ்ரீபாஷ்யகாரரான எதிராஜருக்கு திருவாய் மொழியின் பொருளாகிற ஈட்டிலுள்ள பரம ஹிதத்தை உபதேசித்தவராவர். “திருவாய் மொழியினுடைய அர்த்தத்தை அருளிச் செய்தார் திருமாலையாண்டான்” என்று ப்ரமேயரத்னத்தில் அருளியது காண்க.

(ஏற்றமுள்ள மாசி மகம் இலங்க வந்தோன்) மாசி – தமிழ் மாதத்தில் பதினோராம் மாதமாகும். மாசிக்கு ஏற்றமாவது *“மாசிப்புனர்ப்பூசம் காண்மின் இன்று”* என்று மாமுனிகள் மாசி மாதத்தில் குலசேகராழ்வார் அவதாரம் பற்றி கொண்டாடும் படியான மாதமாகும். இம்மாதமானது பிரிதொன்றுக்கில்லாத சிறப்பை உடையதாய் கொள்ளத்தக்கதானது என்பர். மாசி மகம் சேர்ந்த பௌர்ணமி முழுமை பெற்றதாகும். வருடத்தில் இந்த மாசி மகம் என்பது மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளில் பெருமாளை கருட வாகனத்தில் கடற்கரைக்கு எழுந்தருளப்பண்ணி தீர்த்தவாரி கண்டருளுவது காணலாம். மாசி மகத்தை “கடலாடும் நாள்” என்றும், தீர்த்தமாடும் நாள் என்றும் அழைப்பர். ஆண்டாளும் தை மாதம் முழுவதும் காமன் வரும் இடத்தை அலங்கரிப்பதைச் சொல்லும் போது *“தையொரு திங்களும் தரை மண்டலமிட்டு மாசி முன்னாள் ஐய நுண் மணல் கண்டு தெருவணிந்து அழகினுக்கு அலங்கரித்து அணங்க தேவா”* (நாச்சியார் திரு.1.1) என்கிறாள். *“மாசி முன்னாள்”* என்றால் மாசியில் பூர்வ சுக்ல பக்ஷமாகிற முதல் பதினைந்து நாள். இப்படி முப்புரியூட்டும் சிறப்பு பெற்ற மாசி மாதத்தில் சுக்ல பக்ஷ சதுர்தசியோடு கூடிய மக நக்ஷத்திரத்தில் உதித்தவர் திருமாலையாண்டான் ஆவர்.

(வம்பவிழும் சோலைமலை வாழ வந்தோன்) வம்பு – செவ்வியையுடையதாய், அவிழ் – மலர்ந்த,



ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# திருமாலையாண்டான்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972



தொடர்

வம்பு – பரிமளம், அவிழ்கை – அது ப்ரவஹிக்கை, வம்பு – நறுநாற்றம் கமழாநின்றுள்ள, அவிழ்–புறப்பட விடுகை என்று ஆசார்யர்கள் உரை. அத்தகைய மலையிலுள்ள சோலைச் சிறப்பை ஆழ்வார்கள் அநுபவித்து உள்ளனர். *''மருதப்பொழிலணி மாலிருஞ்சோலை மலை''* (பெரியா.4–2–11) என்கிறபடியே மருதஞ்சோலை களாலே அணியப்பட்டிருப்பதான திருமாலிருஞ்சோலைமலை என்று மாமுனிகள், *''வியன்மாலிருஞ்சோலை''* (4–3–1) என்கிறபடியே – வளப்பத்தை உடையதாகையாலே ஆச்சர்யமான சோலை என்பர். *''புன்னை செருந்தியொடு சூழ் புன வேங்கையும் கோங்கும் நின்று பொன்னரி மாலைகள் சூழ் பொழில் மாலிருஞ் சோலை''* (4–3–3) என்கிறபடியே பொற்கென்ற பூக்களை உடைய புன்னையும் செருந்தியும் புனத்தில் உண்டான வேங்கையும் கோங்கும் ஒழுங்குபட நின்று மலர்கையாலே மலைக்கு பொன்னரி மாலைகள் சுற்றினாப்போலே இருக்கும் பொழிலையுடைய மாலிருஞ் சோலை என்பர்.

மேலும் ஆளத்தி வைத்துப் பாடத்தக்க வண்டுத்திரள்களானவை பண்களைப் பாடிக் கொண்டு தேனை பானம் பண்ணிச் செல்லும்படியாக சோலைகள் வாடாமல் வளர்ந்து செல்லத்தக்க ஊற்றையுடைய மலை (பெரிய.திரு.4–3–5) என்பர். இங்ஙனே பல உள. இத்தகைய வளப்பமான சோலை மலையில் கைங்கர்யமே வாழ்ச்சியாகக் கொண்டவர் ஆண்டான். ஆகையால் வாழ வந்தோன் என்றவாறு. இவரது கைங்கர்யத்தின் சீர்மை அறியும் வகையில், ஆண்டான் பரமபதித்த ஐப்பசி சுக்ல பக்ஷ (வளர்பிறை) துவாதசி அன்று அழகர் நூபுர கங்கையில் தீர்த்தவாரி கண்டருளுவர்.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 82க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | 2 ரு | க்ஷே | த் | தி | 3 ர | ம் | | | 4 சா | ர | 5 தி |
| ங் | க் | | | 6 சு | த | ர் | மா | | ர | | ரு |
| 7 ச | ம | | தி | 8 க | ம் | ச | ன் | | ங் | | ப் |
| | ணி | 9 அ | ர் | ஜு | ன | ன் | ண | ண் | 10 க | சு | 11 ப |
| 12 ப | | | 13 பி | ரு | ந் | தா | வ | ன | ம் | | தி |
| க | ன் | | | | ம் | ம | ர் | 14 த | ர் | ம | ன் |
| 15 வ | த | ம் | 16 து | வா | ர | கை | | | ம | | ண |
| த் | ந் | | 17 ப | க் | தி | | மி | ட | ஷ் | 18 அ | ஷ் |
| கீ | வி | | 19 க | | ந் | | | | 20 பீ | ன் | ரு |
| தை | 21 கோ | வ | ர் | த் | 22 த | ன | கி | ரி | | பு | கி |
| | | ண் | 23 ம | து | ரா | 24 ஞா | | 25 போ | ர் | | ல |
| | 26 க | ர் | ண | ன் | | | | லி | சா | ஞ் | 27 பா |

(மாலாதராரியன்தாள் மாநிலத்தில் வாழியே) மாலாதரர் ஆகிறார் “குருமாலாதரர்'' என்னும் படியான திருமாலை ஆண்டான் என்றது. திருமாலையாண்டான் திருவாய்மொழியின் அர்த்தத்தை இராமாநுஜர் மூலமாக உலகுக்குப் பரப்பினதால் உண்டான குருவாம் தன்மையைச் சொல்லுகிறது. ஆரியன் – ஆசார்யன். எம்பெருமானாருக்கு ஆசார்யர். ஆசார்யராகையாலே ஆளவந்தார் திருவடிகளைப் பற்றி, பின்னர் ஞானத்துக்காக ஆண்டானைச் சார்ந்து ஜீவித்தவர் நாலூராண்டான் என்னும் ஆசார்யராவர்.

ஆசார்யராகையாலே *“ஸ்ரீஸ்தநம்போலே சுவை நிரம்பியவன் அறிவுள்ள சேதநன். அனுபவிப்பவன் பரம போக்தாவான எம்பெருமான். ஆனால் அறிவற்ற பொருளைக்காட்டிலும் பெருமை என்னவென்றால் ஈச்வரன் அனுபவிப்பவன் நாம் சுவை நிரம்பியவர்கள்''* என்கிற ஞான விசேஷம் என்பர் ஆண்டான் (ப்ரமேயரத்னம்). “பசியால் வருந்தியவனுக்கு அமுத பானம் போல் இருக்கிறது துவயம்” என்பர். *“ஸ்ரீஜ்ஞாநபூர்ணம் சிரஸா நமாமி''* என்று இவர் தனியனில் அருளியபடியே திருமாலையாண்டானைத் தலையாலே வணங்குகிறேன் என்றும், அவர் திருவடிகள் இந்த பெரிய உலகில் வாழ வேண்டும் என்றும் பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாம உரை தொடரும்....

ஆயுர் வேதம்

# அத்திமரம்









தெலுங்கு மூலம்:
டாக்டர். சி.மதுசூதன சர்மா,
9000761390.

தமிழாக்கம்:
திருமதி வி.உஷா,
திருப்பதி.

இந்திய கலாச்சார பண்பாட்டில் மிகுந்த பெருமை மிக்க மரம் அத்திமரம். இம்மரத்தைப் பல பெயர்களால் அழைப்பதும் உண்டு.

தாமிர நிறத்திலும், செம்பு நிறத்திலும் காணப்படும் அத்திப்பழத்தை உதும்பர என்றும், தத்தாத்ரேயர் இந்த விருக்ஷத்தில் நிவசிப்பதால் இதனைத் தத்த விருக்ஷமென்றும், யக்ஞம் போன்ற தெய்வீக நிகழ்ச்சிகளுக்கு இவற்றை உபயோகிப்பதால் யக்ஞாங்கம் என்றும், க்ஷீரத்தைக் கொண்டு இருப்பதால் க்ஷீர விருக்ஷம் என்றும் அழைப்பர்.

மோரேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மரத்தின் அறிவியல் பெயர் பைகஸ்க்ளோ மெரேடா என்றும், ஆங்கிலத்தில் க்ளஸ்டர் பிக் என்றும், இந்தியில் குலார் என்றும் அழைக்கின்றனர்.

ஸ்ரீமஹாவிஷ்ணு நரசிம்ம அவதாரத்தில் இரண்யகசிபுவின் உடலை கிழித்த போது ஸ்வாமியின் நகங்கள் மற்றும் திருக்கரங்களில் இரத்தக் கரை படிந்தது. அப்பொழுது அக்கரையை நீக்க லக்ஷ்மி தேவி அத்திமர இலைகளின் சாற்றை எடுத்துக் கைகளுக்குப் பூசினார். அப்போது இரத்தத்தில் உள்ள விஷத் தன்மை நீங்கியதன் காரணமாக ஸ்வாமிக்கு இம்மரம் மிகவும் பிடித்தமானது. எனவே யார் இம்மரத்தை பக்தியுடன் பூஜிக்கிறார்களோ அவர்களுக்கு சகல நன்மைகள் உண்டாகும் என்பதும், ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம் என்பதும் மக்களின் நம்பிக்கை. மேலும் அற்புத மருத்துவ குணமும் இம்மரத்தில் நிறைந்துள்ளது.

### வெள்ளைப்படுதல் குறைய

அத்திப்பழத்தினை சிறு துண்டுகளாக்கி நன்கு உலர வைத்து பொடி செய்து கொண்டு 100 கிராம் அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் 100 கிராம் கற்கண்டு பொடி, 50 மி.லி .தேன் ஆகியவற்றை கலந்து வைத்துக்கொண்டு, 2 வேளை ஒரு டீஸ்பூன் அளவு உட்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் பெண்களுக்கு ஏற்படும் இந்தப் பிரச்சனை நீங்கும்.

### உடல் சூடு குறைய

100 கிராம் அத்திப்பழப் பொடியில், 100 கிராம் கற்கண்டு பொடி, 50 கிராம் சீரகப்பொடி ஆகியவற்றைக் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை வேளைக்கு அரை டீஸ்பூன் வீதம் இப்பொடியை 100 மி.லி. பாலில் கலந்து உட்கொண்டால் உடல் சூடு குறைந்து கால் கை கண் எரிச்சல் வயிற்றில் எரிச்சல், சிறுநீர் மலம் கழிக்கும் போது எரிச்சல் ஆகியவை நீங்கும்.

### வாய்ப்புண் குறைய

அத்தி மரப்பட்டையைச் சிறிது எடுத்து தண்ணீருடன் சேர்த்து நன்கு இடித்து 20–30 மி.லி. அளவு சாறு எடுத்துக் கொண்டு வாய் கொப்பளித்து வந்தால் வாய்ப்புண் நாக்கு எரிச்சல் போன்ற உபாதைகள் விலகும்.

**பலவிதமான வயிற்றுப் போக்குக் குறைய**

நாள்தோறும் மூன்று முறை உணவு உண்பதற்கு முன் மோருடன் அரைடீஸ்பூன் அளவு அத்தி மரப் பட்டையின் பொடியைக் கலந்து உட்கொண்டால் பலவிதமான வயிற்றுப்போக்குகள் குறையும்.

**சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த**

நாள்தோறும் மூன்றுமுறை, ஒரு வேளைக்கு 15 மி.லி. பாகற்காய் இரசத்துடன், 1 அல்லது 2 கிராம் அத்திமரப் பட்டைப் பொடியைக் கலந்து உட்கொண்டால் சர்க்கரை வியாதி கட்டுப்பாட்டுடன் இருக்கும்.

**அதிகமான பசி குறைய**

நாள்தோறும் காலை, மாலை இருவேளை 200 மி.லி. பாலில் அரைடீஸ்பூன் அத்திமரப் பட்டைப் பொடி சேர்த்து, 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி குடித்து வந்தால் பசி குறையும்.

**மூக்கு, வாய் மலத்துவாரம் வழியாக ஏற்படும் இரத்தப்போக்கு குறைய**

நாள்தோறும் 2 முறை வேளைக்கு ஒரு அத்தி மர இலையை இடித்து, 100 மி.லி. அளவு அரிசி கழுவிய நீருடன் சேர்த்து மிருதுவாக அரைத்து வடிகட்டி ஒரு டீஸ்பூன் சர்க்கரை கலந்து உட்கொண்டால் இந்த உபாதை நீங்கும்.

**முழங்கால் இடுப்பு வலி குறைய**

அத்திமரத்தின் பாலுடன் தகுந்தளவு கரக்காய் பொடியைச் சேர்த்து நன்கு கலந்து முழங்கால் மற்றும் இடுப்பு வலி உள்ள இடங்களில் பூசி வந்தால் வலி நீங்கும். காலை, மாலை இருவேளைகளில் 60 மி.லி. அத்திப்பழ இரசத்துடன் அரை டீஸ்பூன் கரக்காய் பொடியைச் சேர்த்து உட்கொள்வதால் இந்த உபாதைகள் நீங்கும்.

**சிறுநீரகக் கோளாறு நீங்க**

200 மி.லி. நீரில் இரண்டு டீஸ்பூன் அத்திமரப் பட்டைப் பொடியைப் போட்டு, 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, இறக்கி ஆறியபின் வடிகட்டி 50 மி.லி. வீதம் குடித்து வந்தால் இவ்வியாதி குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.


## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.8 மார்ச் 2023 விடைகள்

1. ஜாம்பவான்.
2. திருமலை நம்பி.
3. தங்க நெல்லிக்கனிகள்.
4. குலசேகராழ்வார்.
5. சுகபிரம்மர்.
6. கூர்ம அவதாரம்.
7. மோகினி வடிவம்.
8. குலசேகராழ்வார்.
9. கௌதம முனிவர்.
10. காரைக்கால் அம்மையார்.
11. ஔவையார்.
12. ககனாக்ருதி, ஆனந்த விமானம்.
13. திருக்கோட்டியூர் நம்பி.
14. மயன், ஹேமா.
15. திருமங்கை ஆழ்வார்.




**போட்டி எண்.8ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி கீதா கவிதா, வடபழனி, சென்னை.
2. செல்வன் எம்.வேதார்த், அடையார், சென்னை.
3. செல்வன் எம்.சுதர்சனன், ஆற்காடு, ராணிப்பேட்டை மாவட்டம்.




நீதிக் கதை

# நற்குணமே உயர்வு தரும்

– திருமதி எஸ். வைஷ்ணவி, 99893 76756

ஸ்ரீ ராமபக்தன் என்றதும் அனைவருக்கும் நினைவிற்கு வருபவர் அனுமனே. அனுமன் குழந்தை பருவத்திலிருந்தே விண்ணவரும் வியக்கும் வகையில் பல லீலைகளைப் புரிந்து உள்ளார். அனுமனின் சில நிகழ்வுகளை நாம் நினைவு கூர்ந்து, நாமும் அவ்விஷயங்களை நம் வாழ்வில் பின்பற்ற வேண்டும்.



ஒரு சமயம் அனுமன் தன் பசியைப் போக்க சிவந்த பழம் என எண்ணி ஆகாயத்தில் சூரியனை பற்ற பறந்து சென்றார். அன்று சூரிய கிரகணம். ஆதலால் அங்கு வந்த ராகுவை பயமுறுத்த, அதை கேட்க வந்த இந்திரனுடன் போர் புரிந்து, இந்திரனின் தாக்கத்தினால் மயக்கமடைந்த அனுமனை காக்க அனைத்து தேவர்களும் நேரில் வந்து பல வரங்களை அளித்து காப்பாற்றினார்கள். இதிலிருந்து அனுமனின் வீரம், தைர்யம் அறியலாம்.

இராவணன் சீதா தேவியைக் கடத்திச் சென்று, இலங்கையில் காவலில் வைத்திருந்த பொழுது, சீதையைக் கண்டறிய, அனுமனிடம் ஸ்ரீராமர் தன் அடையாளத்தை கொடுத்து தனக்கு தகவல் அளிக்க வேண்டும் எனக் கூறினார். அனுமன் உடனே செயலில் இறங்கினார். கடலை கடக்கும் போது கடல் அரக்கியிடம் சண்டையிட்டு, இலங்கையில் அசோக வனத்தை அடைந்து ,சீதா தேவியைக் கண்டு, தான் கொண்டுவந்த ஸ்ரீராமரின் அடையாளச் சின்னத்தை காண்பித்து, சீதா தேவி கொடுத்த தாயாரின் அடையாளத்தை பெற்றுக்கொண்டு ஸ்ரீராமர் தங்களை காக்க வந்துக் கொண்டிருப்பதையும் கூறினார்.


இலங்கையில் அரசவைக்கு சென்றார். அவருக்கு ஆசனம் எதுவும் அளிக்காததால் தனக்கு வேண்டிய ஆசனத்தை தானே அமைத்து, அரசனுக்கு இணையாக உட்கார்ந்து ஸ்ரீராமரின் கூற்றினைக் கூற, அதை எதுவும் காதில் போட்டுக் கொள்ளாமல் தனது வாலிற்கு தீயிட்ட அரசவையில் உள்ளவர்களைத் தாக்கி, இலங்கையையே தீ இட்டு, பின்னர் ஸ்ரீராமரிடம் சீதையைக் கண்டேன் என்று கூறி ஒரு கணப்பொழுது கூட தன் அரசனான ஸ்ரீராமர் வருத்தம் அடையக் கூடாது என எண்ணி “கண்டேன் சீதா தேவியை” எனக் கூறினார். இங்கு அனுமனின் வாக்சாதுர்யம் எனப்படும் சொல் வன்மை தெரிகிறது.

இலக்குவணன் போர்களத்தில் மயக்கமுற்று வீழ்ந்துக் கிடக்கையில்,





அவரைக் காக்க ஒரு மூலிகை தேவைப்படுகிறது எனவும், அது இமயமலைத் தொடரில் உள்ள சஞ் சீவினி என்ற மலையில் இருக்கிறது எனக் கூறினார் ஸ்ரீராமர். அந்த மூலிகையைத் தேடி அலைந்து, நேரத்தை வீணடிக்காமல் அம் மலையையே அடியோடு பெயர்த்து எடுத்து வந்தார் அனுமன். நேரத்தை வீண டிக்காத குணத்தை இந்த நிகழ்ச்சி மூலம் அறிய லாம்.




ஸ்ரீராமர் இலங்கை யைக் கடக்க கடலின் மேல் பாலம் கட்ட முயன்றபோது, எவ்வளவு முயற்சி செய்தாலும் கட்ட இயலவில்லை. “ஸ்ரீராமா” என்ற நாமத்தை இந்த கற்களின் மேல் எழுதினால் கல்லும் கடலில் மிதக்கும் என நம்பிக்கைக்கொண்டு “ஸ்ரீராமா” என்று எழுதி கடலில் வீசியெறிந்தார். கல்லும் கடலில் மிதந்தது. பாலமும் இனிதே கட்டினர். இந்நிகழ்வு மூலம் அனுமனின் “நம்பிக்கை” அறியலாம்.

ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்ஸவத்தில் தன்னுடன் ஒவ்வொரு நிகழ்விலும் அனுமன் முடிந்த வரை மிகுந்த உதவிகளை புரிந்தான் என ஸ்ரீராமர் கூறினார். அனுமனுக்கு சீதா தேவி தான் அணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றி, பரிசாக அளித்தார். அதனை எல்லாம் பிரித்து பார்த்து கீழே போட்டு விட்டார் அனுமன். இதனைக்கண்டு கோபமுற்ற சீதா தேவி ஏன் இவ்வாறு செய்கிறாய்? என வினவ, அதற்கு அனுமன் இந்த முத்துக்களில் ஸ்ரீராமர் என் கண்ணிற்கு தெரியவில்லை. ஸ்ரீராமர் இல்லாத எந்த பொருளும் எனக்கு உயர்வில்லை எனக் கூறினார். உன்னுடைய இதயத்தில் ஸ்ரீராமர் இருக்கிறாரா? என வினவ, நொடிப்பொழுதும் யோசனை செய்யாமல் தனது இதயத்தை கிழித்து காட்டினார். இதயத்தில் ஸ்ரீசீதா தேவி சமேத ஸ்ரீராமர் காட்சியளித்தார். இதன் மூலம் அனுமனே சிறந்த பக்தன் என்பதை அறியலாம்.

அனுமன் சரித்திரத்தை படித்தால் அதில் அனுமனின் மிகச் சிறந்த குணங்களை ஒவ்வொரு காட்சியிலும் காணலாம். நாம் இங்கு குறிப்பிட்டது சில நிகழ்வுகளே. இதில் மட்டும் காண்போமேயானால் அனுமனைப்போன்று வீரமாக, விவேகமாக, இலக் கினை அடையும் தன்மை, செயலை திறம்பட செய்து முடித்தல் போன்றவற்றை பின்பற்றுதல் வேண்டும். அனுமனைப்போல சொல் வன்மை அதாவது நல்லன வற்றை மட்டும் திறம்பட இனிமையாகச் சொல்லு தல் வேண்டும். எந்த ஒரு பணியையும் துரிதமாகச் செய்து நேரத்தின் முக்கியத் துவத்தை உணருதல் வேண்டும்.

எந்த காலத்திலும் “ஸ்ரீராமா” என்று ஜபித்தால் எல்லாம் நமக்கு சாத்யமே என்பதை உணர்ந்த அனுமன் அன்றும் இன்றும் என்றும் சிறந்த இராம பக்தன் ஆவார்.



நமது
திருக்
கோயில்





# ஜம்மலமடுகு நாராபுரம் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்

ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், ஜம்மலமடுகு அருகில் பென்னை நதியின் கிழக்கே நாராபுரத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு பஞ்சாங்கத்தின்படி வைசாக சுத்த ஏகாதசி முதல் வைசாக மாதம் கிருஷ்ண பக்ஷம் சஷ்டி வரை பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. இங்கு பிரம்மோத்ஸவம் மட்டும் இல்லாமல் ரதஸப்தமி, வைகுண்ட ஏகாதசி போன்ற உத்ஸவ நாட்களுக்கு பக்தர்கள் திரளாக வந்து எம்பெருமானை தரிசிக்கின்றார்கள்.

விஜய நகர பேரரசில் சங்கம வம்சத்தில் ஆட்சி புரிந்தவர்களில் ப்ரௌட தேவராயரும் ஒருவர். அக்காலத்தில் ஜம்மல மடுகு உதயகிரி அரசின் அதிகாரத்தில் இருந்தது. விஜய தேவராயருடைய மனைவி நாராயணம்மா. அவள் கணவருடன் சேர்ந்து இவ்விடங்களில் உலாவினார். இங்கே ஓர் கிராமத்தில் ஆலயத்தை கட்ட எண்ணி ஓர் கிராமத்தை உருவாக்கினாள். அவள் பெயரிலேயே அவ்வூர் நாராயணபுரம் என்றழைக்கப்பட்டது. அவள் அக்கிராமத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தை அமைத்தாள். அவ்வாலயம் “ஸ்ரீநாராபுரம் வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்” என்று அனைவராலும் அழைக்கப்பட்டது. அங்கு கொலுவீற்றிருக்கும் எம்பெருமானும் நாளடைவில் ஸ்ரீநாராபுரம் வேங்கடேஸ்வர ஸ்வாமியாக அழைக்கப் பெற்றார்.

அந்த ராஜகுடும்பம் அங்கே ஓர் அக்ரஹாரம் அமைத்து அதனை நாராபுரம் அக்ரஹாரம் என்று அழைத்தனர். நாளடைவில் அந்த அக்ரஹாரம் பென்னை ஆற்றின் வெள்ளத்தில் அடித்து சென்று நீரில் மூழ்கி விட்டது. காலப்போக்கில் ஆலயமும் பென்னை நதியின் வெள்ளத்தாக்குதலுக்கு உள்ளானது. அக்கிராமத்தினரே அவ்வப்போது ஆலயத்தை சரி செய்து, உத்ஸவங்களை நடத்தினர். இவ்வாலயத்தில் பாஞ்சராத்திர ஆகம முறைபடி பூஜைகள், உத்ஸவங்கள் தற்பொழுது வரை நடைபெற்று வருகின்றன.

கி.பி. 1682ஆம் ஆண்டில் இவ்வாலயத்திற்கு ஜீர்ணோத்தாரணம் செய்து, தேரை நிர்மாணித்து அக்கோயிலில் எம்பெருமானுக்கு உத்ஸவங்களை நடத்தினர். அதன் பின்னர் ஜம்மல மடுகுவை நிர்வகித்த ஆகனூர் நரசன்ன பண்டிதர் கி.பி. 1709ஆம் ஆண்டில் நாராபுரம் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயிலுக்கு பிராகாரத்தை அமைத்தார். திருப்பதியிலிருந்து உலோகத்தாலான விக்ரஹங்களை தயார் செய்து, திருத்தேர் உத்ஸவத்துடன் உத்ஸவங்களும் நடத்தினார்.

இந்த இடத்தில் முகலாயர் ஆட்சி நடைபெற்றாலும் இந்து தர்ம நிகழ்ச்சிக்கு முகலாய அரசு எவ்வித தடையும் செய்யவில்லை. குலமத பேதம் இல்லாமல் நாராபுரம் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியைத் தரிசிக்க பக்தர்கள் கூடுகின்றனர்.

ஆந்திர மாநில அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் இருந்த இவ்வாலயம் 2008, அக்டோபர் 23 முதல் திருமலை திருப்பதி தேவஸ்தான மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டது. அன்று முதல் இந்த ஆலயம் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு, உத்ஸவங்களையும் சிறப்பாக நடத்தி வருகின்றது. உத்ஸவ காலங்களில் இவ்வாலயம் மக்கள் வெள்ளத்தில் திளைக்கிறது. நாமும் இந்த ஆலயத்திற்கு சென்று ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் அருளைப் பெறுவோம்.



# மே 2023
# ராசி பலன்கள்

- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.



### மேஷம்

ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. தீர்க்கமாக யோசித்து முடிவு எடுக்கவும். தொழில் துறையில் நல்ல லாபமும், உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வும் கிட்டும். கணவன்-மனைவி பிரச்சனைகள் தீரும். திருஷ்டி உண்டு. இரவில் தூக்கம் குறையும். யாத்திரை நன்மையைக் கொடுக்கும். நல்ல மதிப்பெண்களைப் பெறுவர். ஆரோக்யத்தில் அக்கறை காட்ட வேண்டிய மாதமிது.

### ரிஷபம்

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். பெண்களால் தனலாபம் உண்டு. செலவினங்கள் அதிகமானாலும் பழைய பாக்கிகள் வசூலாகும். ஆரோக்யத்தில் கவனம் தேவை. தூக்கம் குறையும். பூர்வீக சொத்துக்கள் குறித்து இம்மாதம் பேசுவதும், புது வாகனங்கள் வாங்கவும் வேண்டாம். மாணவர்கள் சுமாரான மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் சுமாரான மாதமிது.

### மிதுனம்

தொழில் துறை விருத்தி, தனலாபம் உண்டு. பதவி உயர்வு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மருத்துவச் செலவுகள் அதிகமானாலும் பெரிய பிரச்சனைகள் வராது. தோஷ பரிகாரங்கள் செய்ய ஏற்ற மாதமிது. தாய், தந்தை, உறவினர்கள், வாழ்க்கைத் துணையாலும் நல்ல அனுகூலம் உண்டு. புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். வெற்றிமேல் வெற்றி தரும் மாதமிது.

### கடகம்

தொழில் துறையில் வேலைப்பளு, அலைச்சல் அதிகமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டு. செலவினங்கள் அதிகமாகும். உடல் உபாதைகள் உண்டாகும். குழந்தைகளால் மனவருத்தம் உண்டு. மாணவர்கள் முயற்சித்தால் மதிப்பெண்கள் பெற முடியும். 15ம் தேதிக்கு மேல் தனலாபம் உண்டு. எடுத்த காரியங்கள் நிறைவேறும். மனக்குழப்பங்கள் குறையும். சுமாரான மாதமிது.

### சிம்மம்

தொழில் துறையில் பிரச்சனைகள் தீரும். தனலாபம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டு. புதிய முயற்சிகள் வெற்றித்தரும். திருஷ்டி அதிகம். வாழ்க்கை துணையின் ஆதிக்கம் அதிகமாகும். கூட்டுத் தொழில் நல்ல லாபம் தரும். செலவினங்கள் அதிகரிக்கும். தாய் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பெண்களுக்கு ஏற்றம் தரும் மாதமிது.

### கன்னி

அலைச்சல் அதிகமாகும். உடல் உஷ்ணமடையும். தூக்கம் குறையும். வேலைக்கிட்டும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. தொழில் துறையில் முயற்சியின் பேரில் நல்ல லாபம் உண்டு. மனைவியின் ஆரோக்யத்தில் கவனம் தேவை. கணவன்-மனைவி சலசலப்புகள் ஏற்பட்டு சரியாகும். தொழில் துறையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### துலாம்

நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் துறையில் தனலாபம் கிட்டும். குழந்தைகளின் ஆரோக்யத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. பூர்வ புண்ணிய சொத்துக்கள் கடும் முயற்சிக்குப் பின்னரே கிட்டும். வருமானம் அதிகரிக்கும். கடன் சுமை குறையும். திருமணம் கைகூடும். குழந்தை பாக்கியம் கிட்டும். மொத்தத்தில் அதிக நன்மை தரும் மாதமிது.

### விருச்சிகம்

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழில் வளர்ச்சிக்காகக் கடன் வாங்கக் கூடிய சூழல் உண்டு. நன்கு படித்தால் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். தாய்-தந்தையர் ஆரோக்யத்தில் கவனம் தேவை. பொதுவாக மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### தனசு

குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. திருமணம் கைகூடும். குழந்தை பாக்யம் கிட்டும். நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் உண்டு. கூட்டு வியாபாரம் வெற்றியைத் தரும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். தைரியமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. பெரிய முன்னேற்றம் தரும் மாதமிது.

### மகரம்

தொழில் துறையில் அலைச்சல் இருந்தாலும் வெற்றி நிச்சயம். எதிர்பார்த்த பண உதவி கிட்டும். கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனை தீரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிட்டும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. விருந்தினர்கள் வருகை அதிகரிக்கும். மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண்கள் கிட்டும். பொதுவில் முயற்சி திருவினையாக்கும் மாதமிது.

### கும்பம்

பிடிவாதமாக காரியங்களை செய்து வெற்றிப் பெறுவீர். தனலாபம் கிட்டும். மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டு. தாய்-தந்தை ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் வளர்ச்சிக்கு கடன் வாங்க வேண்டி வரும். பூர்வீக சொத்துக்கள் கிட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் முயற்சியின் பேரில் வெற்றி பெறும் மாதமிது.

### மீனம்

தொழில் போட்டியில் வெற்றி பெறுவீர். எதிர்பார்த்த தனலாபம் கிட்டும். ஆரோக்யம் நன்றாக இருக்கும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் சுபவிரயம் நடக்கும். திருமணம் கைகூடும். தொழிலில் முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல முன்னேற்றம், தனலாபம் தரும் மாதமிது.

पाठः चतुर्विंश

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-24

पर्वतेषु =மலையில்
शनैः = மெதுவாக
ग्रामः = ஊர்(கிராமம்)
नीचैः = குறைவாக
अङ्गणम् = முற்றம் (வீட்டின் முன்னுள்ள பகுதி)
उच्चैः = உயரமாக

प्र. खादेत् = खादेयुः தன்மை
म. खादेः = खादेत முன்னிலை
उ. खादेयम् = खादेम படர்க்கை

## வினாக்கள்

1. बालकाः अङ्गणे अन्नं खादन्ति।
2. अहम् इदानीमेव शनैः स्नानं कुर्याम्।
3. हे ब्राह्मणाः शनैः शनैः खादत।
4. शीघ्रं मा खादत।
5. अस्माकं बालकाः दौष्ट्यं कुर्वन्ति।
6. युष्मद्ग्रामतटाके जलं सम्यगस्ति।
7. तत्र सर्वदापि तथैव स्यात्।
8. अस्माकं मञ्चः उच्चैः अस्ति रे।
9. किञ्चित् नीचैः करिष्यसि किम्?
10. तथैव करिष्यामि तव मञ्चः कुत्रास्ति?

1. அவர்கள் அனைவரும் இவ்வேளை எங்கள் வீட்டில் உணவு சாப்பிட வேண்டும்.
2. நாளை நாங்கள் மீண்டும் உங்கள் வீட்டில் உணவு உண்போம்.
3. அப்போது அவர்கள் யாரும் இங்கு இல்லை.
4. ஆதலால் எங்கள் அண்ணன் உங்கள் வீட்டில் குளித்தார்.
5. இப்போது உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் ஐயா?
6. உங்கள் ஊரில் ஏரி இருக்கிறதா?
7. இருக்கிறதே தவிர இப்போது தண்ணீர் இல்லை.
8. எங்கள் ஊரில் மலைகள் கூட இருக்கின்றன.
9. உங்கள் ஊரில் எங்கள் தந்தை இல்லையா?
10. எதற்கு இல்லை? அங்கேயே இருக்கிறார் அல்லவா!

## விடைகள்

1. சிறுவர்கள் முற்றத்தில் உணவு சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.
2. நான் இப்போதே மெதுவாகக் குளியல் செய்வேன்.
3. ஓ பிராம்மணர்களே மெதுவாகச் சாப்பிடுங்கள்!
4. விரைவாகச் சாப்பிடாதீர்கள்.
5. எங்களுடைய சிறுவர்கள் தொல்லை செய்கின்றனர்.
6. உங்கள் ஊர் ஏரியில் தண்ணீர் நன்றாக இருக்கிறது.
7. அங்கு எப்போதும் அப்படியே இருக்கும்.
8. எங்கள் படுக்கை உயரத்தில் இருக்கிறது டா!
9. சிறிது கீழே இறக்குவாயா?
10. அப்படியே செய்கிறேன். உன்னுடைய படுக்கை எங்கு இருக்கிறது?

1. ते सर्वे अद्य अस्माकं गृहे भोजनं कुर्युः।
2. श्वः वयं पुनः युष्मद्गृहे भोजनं करिष्यामः।
3. तदानीं ते केऽपि अत्र न आसन्।
4. तदर्थमेव मम भ्राता युष्मद्गृहे स्नानं अकरोत्।
5. इदानीं तव गृहे के के सन्ति भोः?
6. युष्मद् ग्रामे तटाकम् अस्ति वा?
7. अस्ति परम् इदानीं जलं नास्ति।
8. अस्माकं ग्रामे पर्वताः अपि सन्ति।
9. युष्मद् ग्रामे मम पिता नास्ति वा?
10. किमर्थं नास्ति। तत्रैव अस्ति खलु।

தெலுங்கு மூலம்: மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு: அமரர் மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா, தமிழாக்கம்: டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

| | |
|---|---|
| 1. நரசிம்மர் | - அ. அனந்தாழ்வான் |
| 2. வாள் | - ஆ. 4வது அவதாரம் |
| 3. மதுரகவி | - இ. அன்னமய்யா |
| 4. சித்திரை | - ஈ. 2வது அவதாரம் |
| 5. கூர்மம் | - உ. சித்திரை |

1.ஆ, 2.இ, 3.உ, 4.அ, 5.ஈ.



### சுலோகம் அறிவோம்!


*ஶ்ரீமத் பயோநிதி நிகேதந: சக்ர பாணே!*
*போகீந்த்ர போகமணிராஜித புண்யமூர்தே! ।*
*யோகீஸ! ஸாஸ்வத! ஸரண்ய! பவாப்திபோத!*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

*- ஸ்ரீ லக்ஷ்மிந்ருசிம்ம கராவலம்ப ஸ்தோத்திரம்*

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

ஒலிக்கும் எல்லாம் இடத்தில் அனுமனும் வீற்றிருப்பார் "இராமநாமம்"

"இராமநாமம்" ஒலிக்கும் இடத்தில் எல்லாம் அனுமனும் வீற்றிருப்பார்



### பாதையைக் கண்டுபிடி

குழந்தை பிரகலாதன் ஶ்ரீமந்நாராயணனிடம் மிகுந்த பக்தி வைத்திருந்தான். லக்ஷ்மி நரசிம்மரை சென்றடைய பிரகலாதனுக்கு பாதையைக் காட்டிடுங்கள்.



### விடுகதை பகுதி...

1. யாரும் ஏற முடியாத மரம், கிளையில்லாத மரம், அது என்ன மரம்?
2. பூவுக்குள் பூ வைத்து போர்த்திய பூ, அது என்ன பூ?
3. சட்டையைக் கழற்றினால் சத்துணவு. அது என்ன?

1) வாழை மரம்,
2) வாழைப்பூ,
3)வாழைப்பழம்.

விநாடி விநாடி

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-10

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. பிரம்மசாரியாக தன்னுடன் வந்த ஸ்ரீராமனை கல்யாணராமனாக ஆக்கியவர்.........................................
2. அடித்த கை பிடித்த பெருமால் ........................................................................................
3. நவ நரசிம்மர் வீற்றிருக்கும் திவ்ய தேசம் ......................................................................
4. தமிழ்நாட்டின் பஞ்ச நரசிம்மர் தலங்கள் ........................................................................
5. திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தவர்....................................................
6. பக்தர்கள் உகந்து போற்றும் திருவேங்கடவனின் பெயர்...........................................................
7. "கௌசல்யா சுப்ரஜா ராம" என்று ஸ்வாமியை முதலில் துயிலெழுப்பியவர்.......................................
8. மதுரகவி ஆழ்வார் அவதரித்த தமிழ் மாதம், நட்சத்திரம்.......................................................
9. விசுவாமித்திரருக்கு பிரம்ம ரிஷி பட்டம் வழங்கியவர்..........................................................
10. கண்ணிநுண் சிறுதாம்பு பிரபந்தத்தை அருளியவர்.................................................................
11. இராமாநுஜரால் நீ ஒருவரே ஆண்பிள்ளை என்று போற்றப்பட்டவர்...............................................
12. காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர எனப் பாசுரமிட்டவர்...................................................
13. திருக்கச்சி திவ்யதேச விமானத்தின் பெயர்.......................................................................
14. சங்கரர் தன் சீடன் சனந்தருக்கு வழங்கிய பெயர் ...............................................................
15. திருமலையில் அனந்தாழ்வான் ஏற்படுத்திய நந்தவனத்தின் பெயர்.................................................



## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.05.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

## இதில் பொருந்தாதது ஏது?



.................................



.................................




.................................




.................................

குறிப்பு : பிரகலாதன், அன்னமய்யா, பாலஅனுமன், பாற்கடலில் தோன்றியவை இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்




1) வாயில் தோரண அலங்காரம்
2) மலை முகடு
3) மயில்
4) கோலம்
5) சிறுவர்கள்
6) வேலி
7) பிரகலாதன் கழுத்தில் டாலர்

# ஸ்ரீகூர்ம அவதாரம்

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு.
சித்திரம் :திரு. கே. துளசிபிரசாத்.




மேருமலையும் கடலில் மூழ்க ஆரம்பித்தது. தேவர்களும், அசுரர்களும் கலக்கமுற்றனர்.
ஐயோ! மத்து இல்லாமல் எப்படி கடைவது?
ஸ்ரீஹரி காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்.
ஸ்ரீஹரி அங்கே தோன்றி அபயமளித்தார்.
ஸ்ரீஹரி கூர்ம அவதாரம் எடுத்து தன் முதுகில் மேருமலையைத் தாங்கினார். தேவர்கள்...
மீண்டும் கடையத் துவங்கினர்
இன்னல் நீங்கியது. இனி கடைவோம்.
தேவர்களும், அசுரர்களும் ஆதி கூர்மத்தை வணங்கினர்.
ஓம் ஸ்ரீகூர்ம நாராயணாய நம:
ஓம் ஸ்ரீகூர்ம நாராயணாய நம:
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் □□□□□□□□□□

2. தேவையான மொழி : □ தெலுங்கு □ தமிழ் □ கன்னடம் □ இந்தி □ ஆங்கிலம் □ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : □ ரூ.240/- □ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

**24 மணி நேரமும்**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

22-03-2023 அன்று திருமலை ஆலயத்தில் உகாதி ஆஸ்தானத்தை முன்னிட்டு சோபகிருது வருட பஞ்சாங்கத்தை சிரசில் சுமந்து வரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள். இந்நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். தம்பதியினர்






05-04-2023 அன்று ஒன்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணத்தை முன்னிட்டு ஆ.மா. அரசு சார்பில் பட்டு வஸ்திரம், அக்ஷதைகளை சமர்ப்பித்த துணை முதல்வர் திரு. கொட்டு சத்தியநாராயணா, அமைச்சர் பெத்திரெட்டி ராமச்சந்திரா ரெட்டி அவர்கள். உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், தி.தி.தே. இ.வோ., ஜெ.இ.வோ. மற்றும் பிரமுகர்கள் பங்கு கொண்டனர்.









SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-04-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

